Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

இலவசப் பிரதி

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-30 16-10-2004 சனிக்கிழமை ஓசை -241




— கொக்காவில், பரந்தனில் —

# இரு கோர வீதி விபத்துக்களில் மூவர் மரணம்; 6 பேர் படுகாயம்!


## ஹயஸ் வாகனம் முற்றாகச் சேதம்

(அலுவலக செய்தியாளர்)

**வன்னிப்பகுதியில் இடம்பெற்ற இருவீதிவிபத்துக்களில் மூவர் பலியானதுடன் 6பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் ஹயஸ் வாகனம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. மேற்படி விபத்துக்களில் ஒன்று ஏ-9 பிரதான வீதியின் கொக்காவில் சந்திக்கு அருகாமையில் நேற்றுமாலை 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மிகவும் கோரமான இவ்விபத்தில் இருவர் மரணமடைந்ததோடு 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

இச்சம்பவத்தில் கிளிநொச்சியில் இருந்து புளியங்குளம் சென்றுகொண்டிருந்த பாரவூர்தியும் புளியங்குளத்திலிருந்து முகமாலை சென்றுகொண்டிருந்த ஹயஸ் ரக வாகனமும் நேருக்குநோ மோதிக்கொண்டன. ஹயஸ் வாகனம் பாரவூர்தி முன்பாக சில்லுக்குள் சிக்குண்டது. அந்த இடத்திலேயே ஹயஸ் சாரதி மரணமானார். பின்னர் மீட்புப்பணியில் ஈடுபட்ட தமிழீழ காவல்துறையினரின் துரித நடவடிக்கைகளால் வாகனத்தில் வந்த மிகுதி 7 பேரும் உடனடியாகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்

(12ஆம் பக்கம் பார்க்க)



கொக்காவில் பகுதியில் நடைபெற்ற விபத்தில் சேதமடைந்த ஹயஸ் வாகனம்



பூநகரி வீதியில் இடம் பெற்ற கோரவிபத்து

## மின்னல் தாக்கியதில் இளைஞர் படுகாயம்

முல்லை மாவட்டத்தில் தினமும் பெய்து வரும் இடிமின்னலுடன் கூடிய மழையின்போது மின்னல் தாக்குதலுக்கு மக்கள் உள்ளாகி வருகின்றனர்.

நேற்று பிற்பகல் ஒருமணியளவில் உடையார்கட்டுப் பகுதியில் மின்னல் தாக்கியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

உடையார்கட்டு குரவயல் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஜீவானந்தம் என்பவரே இவ்வாறு மின்னல் தாக்கிவைத்தியசாலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-படையினர் 19 ஆம் திகதி சந்திப்பு

கிழக்குமாகாண படைஉயர்அதிகாரிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அடுத்த சுற்றுப்பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைவெறவுள்ளன.

இப்பேச்சுவார்த்தை வவுணதீவுப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது.

-வாழைச்சேனைப் பகுதியில்-

## இரு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களில் இரு இளைஞர்கள் படுகாயம்!

மட்டக்களப்பு வாழைச்சேனை விநாயகபுரத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நெஞ்சில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள செல்லத்துரை ஆனந்தன் (வயது 32) என்பவரே காயமடைந்தவராவார். நேற்று முன் தினம் 8.15 மணியளவில் இவரது வீட்டிற்குச் சென்ற இனந் தெரியாத நபர்கள் இருவர் கடிதமொன்று தர

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரு ஊர்காவற்படையினரையும் விடுவிக்க க.கா.குழு கோரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற் படையினரையும் விரைவில் விடுதலை செய்யுமாறு விடுதலைப் புலிகளிடம் கோரியுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

தற்போது ஐரோப்பாவிற்கு விஜயம் செய்துள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் புலிகள் இவ் இருவரையும் விடுதலை செய்வார்களென நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

## யாழ். இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணம் 6 மாதங்களாக இல்லை

யாழ்.குடாநாட்டில் இடம் பெயர்ந்த மற்றும் தொழில் இழப்பினால் பாதிக்கப்பட்டகுடும்பங்களிற்கு அரசினால் வழங்கப்பட்டுவரும் உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவு கடந்த ஆறு மாதங்களிற்கு மேலாக வழங்கப்படாதுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது.

இதனால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளன.

இதனிடையே கடந்த ஏப்ரல் மாதத்திற்கான உலர் உணவு நிவாரணத்தை விநியோகிக்குமாறு யாழ். செயலக திட்டப்பணிப்பாளர். அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிற்கும் தற்போது அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.ஆயினும் கூட்டுறவுச் சங்கங்களில் நிவாரணப் பொருட்களில் முக்கியமானதான அரிசி போதிய கையிருப்பில் இல்லாதுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக வழங்க முடியாததோர் நிலை நீடிப்பதாகக் கூட்டுறவு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவில் பணியாற்றும் பின்லாந்துக்குப் புலிகள் பாராட்டு

### -பின்லாந்து அரச பிரதிநிதியிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

மிகச் சிறப்பான பணியை முன்னெடுத்துவரும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் பின்லாந்து உறுப்பினர்களின் அற்புதமான பணிக்காக ஈழத் தமிழ் மக்கள் பின்லாந்து அரசிற்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்று பின்லாந்து அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க செயலாளரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பின்லாந்து வெளிநாட்டு அமைச்சு வளாகத்தில் நடைபெற்ற சந்திப்பில் பின்லாந்து அரசியல் வெளிவிவகார இராஜாங்க செயலாளர் திரு.ஜாக்கோ லஜாவா அவர்கள் தலைமையிலான குழுவினரைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்து விரிவாக விளக்கினர். இச்சந்திப்பில், சிறிலங்கா

(12 ஆம் பக்கம் பார்க்க)



# கிளி.யில் தேசிய மர நடுகை தினம் நேற்று வைபவரீதியாக ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தேசிய மரநடுகை தினம் நேற்று கிளிநொச்சியில் வைபவரீதியாக கொண்டாடப்பெற்றது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தினால் நேற்று கிளிநொச்சிக் கலைபண்பாட்டு மண்டபத்தில் மேற்படி நிகழ்வு இடம் பெற்றது.

பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் தாஸ் தலைமையில் நேற்றுக் காலை 10.15. மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச் சுடரினைக் கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம் ஏற்றிவைக்கத் தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார். மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து கலைபண்பாட்டு மண்டப வளாகத்தில் தேசிய மரநடுகை தினத்தை முன்னிட்டு மரநடுகை ஆரம்பித்து வைக்கப் பெற்றது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் மரத்தினை நாட்டிநிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள் வளாகத்தில் பயன்தரு மரங்களை நாட்டிவைத்தனர்.

தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் இடம் பெற்றது. தலைமையுரையினை தொடர்ந்து முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் கருத்துரைகளை வழங்கினர்.

அதனை தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு பழமரங்கள் மற்றும் பயன்தரும் மரங்கள் பொருண்மிய மதியுரையகத்தினரால் இலவசமாக வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவன கிளிநொச்சித் திட்ட முகாமையாளர் காவா, அரசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் இ.கணேசபிள்ளை, கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவன முதல்வர் பிரபாகரன், மற்றும் நிறுவன தலைவர்கள் விவசாயக்கல்வி மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)





## க.பொ.த(உ.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாதிரிப் பரீட்சை

தமிழீழ மாணவர் அமைப்பும், கிளி. மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியமும் இணைந்து 2005 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான மாதிரிப்பரீட்சையை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடாத்தி வருகிறது. கடந்த கிழமைகளில் உயிரியல், இணைந்த கணிதம், பௌதிகவியல் ஆகிய பாடங்களுக்கான முதலாவது பரீட்சை நிறைவடைந்துள்ளது. அடுத்த கிழமை இரசாயனவியல் பாடம் நடைபெறவுள்ளது. இப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 65 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். பரீட்சையின் மறுநாள் பரீட்சை மீட்டல் வகுப்பும் நடைபெற்று வருகிறது. இப் பரீட்சை தொடர்ச்சியாக ஒவ்வொரு கிழமையும் நடைபெற ஏற்பாடகியுள்ளது.

## "பொப் லெப்" செயற்றிட்டச் செயலமர்வு மாங்குளம் ம.வியில் நடைபெறும்

நூல் அடிப்படையிலான மொழிவளப்படுத்தல் செயற்றிட்டம் என அழைக்கப்படும் பொப்லெப் செயற்றிட்டச் செயலமர்வில் கிளிநொச்சியில் நேற்று கலந்து கொள்ள முடியாத ஆசிரியர்கள், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பாளர் ந. ஆனந்தராஜ் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களில் இருந்து பொப் லெப் செயற்றிட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 4இல் ஆங்கிலம் கற்பிற்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு திட்டமிட்டபடி 17 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்

## நினைவு மண்டப திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் இன்று காலை 9.00 மணிக்கு அமரர் சாமுவேல் சுப்பையா அவர்களின் நினைவு மண்டபத்திறப்பு விழா நடைபெறவுள்ளது.அழகியல் கலாமன்றத்தின் ஆசிரியர் ஆர்மோனியவித்துவான் அமரர் சாமுவேல் சுப்பையா அவர்களின் நினைவாகவே இம் மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

## துயர் பகிர்கின்றோம்

### அமரர் கி. வெங்கடாசலம்

எமது அன்பிற்கும் மதிப்பிற்குரிய அமரர் கி. வெங்கடாசலம் அவர்கள் 15.10.2004 ஆம் திகதி அன்று அகால மரணமடைந்த செய்தியைக்கேட்டு அதிர்ச்சியுற்ற தோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கிளைப் பணியாளர்கள்,
இளம் தென்றல் வாணிபம்.

(5187)


சிவகுரு வாணிபத்தினரின் நவீன உமாசாகி காட்சியறை
18-10-2004 திங்கட்கிழமை கோலாகலமான திறப்புவிழா

- 18-10-2004 கொள்வனவு செய்யும் உந்துருளிகளுக்கு கொழும்பு விலையில் விசேட கழிவு
- 31-10-2004 வரை கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- 2 தலைக்கவசம்,2 மழைக்கவசம், 3கணணி முறையிலான இலவச சுத்திகரிப்பு.
- பதிவுச்சான்றிதழ்கள் ஒருவாரத்தில் பெற்றுக்கொடுக்கப்படும்.

இலகு தவணைக்கட்டண முறையில் உமாசாகி உந்துருளி கொள்வனவு செய்யும் பொருட்டு St.Anthony's Consolidated Ltd நிறுவனத்தால் வங்கிக்கடன் வசதிகள் செய்து தரப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைப்பதில் மகிழ்வடைகின்றோம்.

உங்களுக்கான தெரிவுகளுக்கு எமது குளிரூட்டப்பட்ட காட்சியறைக்கு வாருங்கள்

உமாசாகி உந்துருளிகளுக்கான வடபகுதி முகவராண்மை பெற்றவர்கள்

UMAZAKI

சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

இல. 496,496/1, நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.

Free Service WARRANTY 10,000km or 1year

(சி.10488)



# சனவரியில் ஈராக் பொதுத் தேர்தல்
# உதவி வழங்கும் மாநாட்டில் நம்பிக்கை

## -பாதுகாப்பைப் பலப்படுத்தவே முன்னுரிமை

(டோக்கியோ)

**ஈராக்கின் புனரமைப்பிற்கென உதவி வழங்கும் நாடுகளின் 2 நாள் மாநாடு டோக்கியோவில் நேற்று முன்தினம் நிறைவடைந்துள்ளது. இம் மாநாட்டில் சமூகமளித்திருந்த உலக நாடுகளினதும் சர்வதேச நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் அதிகரித்த நிதியுதவி ஈராக்கின் புனரமைப்பிற்கு வழங்கப்படுமென்று உறுதி கூறியுள்ளனர்.**

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் முடிவில் கூட்டறிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. 57 நாடுகளினதும் சர்வதேச அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் கருத்து வெளியிடுகையில்,

சனவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு முன்னதாக நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கு உதவி வழங்கப்படுமென்று குறிப்பிட்டுள்ளார்கள். இம்மாநாட்டில் கலந்து கொண்ட ஈராக்கின் திட்டமிடல் அமைச்சர் அங்கு உரையாற்றுகையில் ஈராக்கின் பாதுகாப்பைப் பலப்படுத்தவென அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றித் தமது நாடு ஆராயுமென்றும், சர்வதேச நிதியுதவியை நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் 3வருட காலத்தில் செலவிடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். ஈராக்கின் புனரமைப்புச் சம்பந்தமாக ஜப்பானிய விசேட தூதுவர் தகவல் தருகையில்,

ஈராக்கில் சனவரி மாதம் பொதுத் தேர்தல் நடத்தப்படுமென்ற நம்பிக்கை டோக்கியோ மாநாட்டில் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றதென்று குறிப்பிட்டார்.

நிதியுதவி வழங்கும் புதிய நாடாக ஈரான் இணைந்திருக்கின்றது. யப்பான், ஈரான், ஐரோப்பிய சமூகம் என்பன பெருமளவு நிதியுதவியை வழங்குவதாக உறுதியளித்திருக்கின்றன.

அதேவேளை ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் தங்களது உதவித்தொகை பற்றி எந்தவித அறிவித்தலையும் விடுக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

## சனாதிபதி கோல்பியா வெற்றி

கமரோனில் கடந்த திங்கட் கிழமை இடம் பெற்ற சனாதிபதித் தேர்தலில் தற்போது பதவி வகிக்கும் கோல்பியா 75 சதவீதமான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார். இதற்கமைய 7 ஆண்டுகளுக்கு இவர் பதவி வகிப்பார்.



பாக்தாத்தில் இருகுண்டு வெடிப்புகள் நேற்று இடம்பெற்றுள்ளன. இக்குண்டொன்று வெடித்தபின் ஏற்பட்ட புகை மண்டலத்தின் மேலாக அமெரிக்க இராணுவ பிளாக்ஹவாக் உலங்கு வானூர்தி பறக்கின்றது.

# தீவிரவாதிகளை ஒப்படைக்காவிட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

## -பலூஜா வாழ் மக்களுக்கு எச்சரிக்கை

(பாக்தாத்)

"ஈராக்கில் தீவிரவாதிகள் ஆதிக்கத்தில் உள்ள பலூஜா நகரில் பதுங்கி இருக்கும் அல்-ஜர்க்காவியையும், அவர் சகாக்களையும் அந்த நகர வாசிகள் ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால், கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்" என்று ஈராக் இடைக்காலப் பிரதமர் அயத் அல்லாவி எச்சரித்துள்ளார்.

ஈராக் சன்னி முஸ்லிம் தீவிரவாதிகள் பிடியில் உள்ள நகரம் பலூஜா ஆகும். இந்த நகரத்தில் தான் தீவிரவாதிகள் அல்-ஜர்க்காவி தலைமையில் அமெரிக்காவுக்கு எதிராக கடும் யுத்தம் செய்து வருகிறார்கள்.

அமெரிக்கப் போர் விமானங்கள் பலூஜா நகரில் குண்டு மழை பொழிந்து வருகின்றன. அல்-ஜர்க்காவி பதுங்கியிருப்பதாக நினைத்துப் பல கட்டடங்கள் மீது குண்டுகளை வீசி வருகின்றன.

அமெரிக்காவின் எதிரியையும் (அல்ஜர்க்காவி) மற்ற வெளிநாட்டு தீவிரவாதிகளையும் பலூஜா நகர மக்கள் அரசிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களை ஒடுக்குவதற்காக மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என ஈராக் இடைக்காலப் பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# ஜோன் ஹெரிக்கான ஆதரவு உயர்வு

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதித் தேர்தல் நவம்பர் 2ஆம் திகதி நடைபெறவிருக்கும் அதேவேளை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் இற்கும் ஜோன் ஹெரிக்குமிடையிலான விவாதம் இடம் பெற்று வந்தது தெரிந்ததே. இவ்விவாதத்தில் அதிகமான ஆதரவை ஜோன் ஹெரி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதியாக கடந்த புதன் கிழமை அரிசோனா மாநிலத்தில் இடம் பெற்ற விவாதத்தின் போதும் ஜோன் ஹெரியே முன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புஷ்ஷும் ஹெரியும் 48 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் விவாதத்தின் போதும் விவாதத்தின் பின்னரும் புஷ் ஹெரியைவிட 6 புள்ளி குறைவாகவே பெற்றுள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு 3 விண்வெளி வீரர்கள் பயணம்

விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி ஆராய்ச்சி செய்வதற்காக விண்வெளி வீரர்களை ஏற்றிக்கொண்டு 'சோயுஸ்' டி.எம்.ஏ.5ரொக்கெட் நேற்று முன்தினம் விண்ணில் பறந்தது. ரஷ்ய வீரர்கள் ஷலிஸ்ஷான்ஷரிபோவ், ஷார்ஜின், அமெரிக்க வீரர் லெராய சியாவோ ஆகியோர் இந்த ரொக்கெட்டில் பயணமாயினர். ஷார்ஜின் தவிர மற்ற 2 பேரும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை அங்கு தங்கி ஆராய்ச்சி செய்வார்கள். ஷார்ஜின் மட்டும் விண்வெளியில் 10 நாள் சுற்றி வருவார்.

கஜகஸ்தானில் உள்ளன. பகானூர் விண்வெளி நிலையத்தில் இருந்து சோயுஸ் ரொக்கெட் காலை 8.36 மணிக்கு நெருப்பைக் கக்கிக்கொண்டு விண்ணில் சீறிப்பாய்ந்தது. அது 10 நிமிடத்தில் பூமியின் சுற்றுப்பாதையில் நுழைந்தது.இன்று சனிக்கிழமை இந்த ரொக்கெட் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைய இருக்கிறது.

சர்வதேச விணிவெளி நிலையத்தில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஆராய்ச்சி செய்து வந்த ரஷ்யாவின் கென்னடிபடால்கா, அமெரிக்காவின் மைக்கேல்பிங்கே ஆகியோர் சோயுஸ் ரொக்கெட்டில் சார்ஜின்உடன் பூமிக்குத் திரும்புகிறார்கள்.



அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷும் சனநாயகக்கட்சி வேட்பாளர் ஜோன்ஹெரியும் (இடது) இறுதி சனாதிபதி வேட்பாளருக்கான விவாதத்தின் ஆரம்பத்தில் கைகுலுக்குகின்றனர்.



பாங்கொக்கில் அரச ஸ்தாபனம் ஒன்றின் முன் தமது கைகளை உயர்த்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தாய்லாந்து விவசாயிகள்.

# 2007-வரை இராணுவத் தலைமைத் தளபதியாக சனாதிபதி முஷாரப் பதவிவகிக்க அனுமதி !


## -பாராளுமன்றில் தீர்மானம் நிறைவேறியது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பைத் தொடர்ந்தும் அந்நாட்டின் இராணுவத் தலைமைத் தளபதியாக 2007ஆம் ஆண்டுவரை பதவிவகிக்க அந்நாட்டின் நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற வாக்கெடுப்பின் மூலம் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆண்டின் இறுதிக்குள் தான் இராணுவத்தலைமைத் தளபதிப் பொறுப்பிலிருந்து விலகுவதாக முஷாரப் முன்னர் கூறியிருந்தார். ஆனால் நாடாளுமன்றம் இதற்கு மாறாக வாக்களித்துள்ளது.

அல்-ஹைதா அமைப்புடன் தொடர்புடைய பாகிஸ்தானிய தீவிரவாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கக்கூடிய சிறந்த தலைவராக முஷாரப்பை தாம் கருதுவதால் அவர் இராணுவத் தலைமைத் தளபதியாகப் பதவி வகிக்கவேண்டுமென ஆளும்கட்சியினர் கோரியுள்ளனர்.



ஆப்கானில் விதவைப் பெண்கள் தங்களுக்கான நிவாரணப்பொருட்களை வாங்கிட வரிசையில் நிற்கின்றனர்.

# வறுமை,பட்டினியை பாதியளவு குறைக்க வளம்மிக்க நாடுகள் உதவ வேண்டும்

## -ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்து

2015ஆம் ஆண்டிற்குள் வறுமையினையும், பட்டினியையும் பாதியளவிற்குக் குறைக்க வேண்டும் எனும் குறிக்கோளினை எட்டுவதற்கு ஏழை நாடுகளுக்கு வளமான நாடுகள் உதவிசெய்ய வேண்டுமென்று ஐ.நா.சபையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா.பொதுச்சபையில் மக்கள் தொகை மற்றும் வளர்ச்சி என்பது பற்றிய சர்வதேச மாநாட்டின் 10ஆம் ஆண்டு தின நிகழ்வையொட்டி உரையாற்றிய வெளியுறவுத்துறைச் செயலர் அகமது ஏழை நாடுகளுக்கு அளிக்கப்பட்ட உறுதி மொழிகளுக்குக் குறைவாகவே சர்வதேச நிதியுதவிகள் கிடைத்துள்ளதாகக் கூறி வருத்தம் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சி ஏழை நாடுகளில் மிக அதிகமாக இருந்ததாகக் குறிப்பிட்ட அமைச்சர், நிலையான பொருளாதார வளர்ச்சியும், மேம்பாடும் மிகவும் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

# சீனப் பொறியியலாளர் பலி !

அல்-ஹைதா தீவிரவாதிகள் பிடித்த சீனப் பொறியியலாளர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். பாகிஸ்தானில் சீனப் பொறியியலாளர் வாங் எண்டே, வாங் பெங் ஆகியோர் கடத்தப்பட்டிருந்தனர். அவர்களை கடந்த சனிக்கிழமை பிடித்தனர். கைதிகள் வைக்கப்பட்டிருந்த இடம் பாகிஸ்தான் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்ட வேளை நேற்று முன்தினம் ஒரு சீனப் பொறியியலாளர் கொல்லப்பட்டார். இன்னொருவர் படுகாயமடைந்தார். கடத்தல்காரர்கள் 5பேரும் கொல்லப்பட்டனர்.

# ஒட்டுசுட்டான் உதவி அ.அ.பிரிவில்
# இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறப்பு


(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவில் இரண்டு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப் பட்டுள்ளன.


யுனிசெப் நிதி நிறுவனத்தின் உதவியுடன் அமைக் கப்பட்ட இரு ஆரம்ப சுகாதார நிலையங்களே திறந்து வைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் 10.00 மணியளவில் கரிப்பட்ட முறிப்பில் கரிப்பட்ட முறிப்புக் கிராம சேவையாளர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரினை கரிப்பட்டமுறிப்புப் பாடசாலை அதிபர் பஞ்சலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

நண்பகல் 12.30 மணியளவில் முத்துஐயன்கட்டு இடதுகரையில் நிகழ்வின் விழாக்குழுத் தலைவர் பேரின்பராசா தலைமையில் பொதுச்சுடரினை ஒட்டு சுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாசினி கந்தையா ஏற்ற, தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் கதிர் அவர்கள் ஏற்றினார். பெயர்ப் பலகையினை முல்லை மாவட்ட உதவி அரச அதிபர் செல்வி ஆரணிதிரை நீக்கம் செய்து வைத்தார்.



பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் து.வி. ஜெயக்குலராஜா முத்தையன்கட்டு ஆரம்ப சுகாதார பரிசோதனை அறையின் நாடாவை வெட்டித் திறந்து வைத் துள்ளார்.



யுனிசெப் பிரதிநிதி செல்வி ஹிரோகோ கருத் துரை வழங்குகின்றார். (படங்கள்-கவியரசன்)

ஒட்டுசுட்டான் கமக்கார அமைப்புத் தலைவர் நா. குலசிங் கம் ஏற்ற, தேசியக் கொடியினை மாங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் அணியழகன் ஏற்றினார். பெயர்ப் பலகையினை மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப் பாளர் து. வி. ஜெயக்குலராஜா திரை நீக்கம் செய்து வைத்தார். யுனிசெப்பின் உதவித் திட்ட அலுவலர் செல்வி ஹிரோகோ நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

பரிசோதனை அறையினை சுகாதார சேவைகளின் முல்லை. மாவட்ட நிர்வாக அலுவலர் நாகேசுபரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். விடுதி அறையினைக் கட்டட நாடாவினை யுனிசெப்பின் உதவித் திட்ட அலு வலர் செல்வி ஹிரோகா வெட்டித் திறந்து வைத்தார். பரிசோதனை அறையினை மா.பி. சு.சே. பணிப்பாளர் ஜெயக்குலராஜா திறந்து வைத்தார். விடுதி அறை யினைச் சுகாதார சேவைகள் முல்லை. மாவட்ட நிர் வாக அலுவலர் நாடாவினை வெட்டித் திறந்து வைத் தார். கருத்துரைகளை கோட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் ஈழவன், முத்துஐயன்கட்டு இடதுகரைக் கிராம சேவைகர் சிவநேசன் வருகை தந்த பிரதி நிதிகள் அனைவரும் இரு இடங்களிலும் கருத்து ரைகளை வழங்கினர். (05)

## வட்டக்கச்சிப் பிரதேசத்தில்
## காவல் துறையினரின் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தில் வட்டக்கச்சி பிரதேச காவல் துறை யினரால் மக்களின் குற்றவியல், குடியியல் பிணக்குகள் தொடர் பான விசாரணைகளின் நடமாடும் சேவைகள் தொடர்ந்து நடாத்தப் படவுள்ளதாகவும் இதில் இப்பிர தேச மக்கள் கலந்துகொண்டு தமக்கிடையிலான பிணக்குகளை தீர்த்துக்கொள்ள முடியும் என வட்டக்கச்சிப் பிரதேச காவல்துறை பொறுப்பதிகாரி கின்ஸ்சிலி தாஸ் தெரிவித்துள்ளார்.

குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்படுவதுடன் மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் நடைமுறைகள் மீது தீவிர கவனம் செலுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (15)

## உலக நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு முல்லை.மாணவரிடையே போட்டிகள்

உலக நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு போறுாட் நிறுவனத்தால் முல்லை. மாவட்டப் பாடசாலை மாண வர்களுக்கிடையேயான பேச்சு, கவிதை, நாடகம், கட்டுரை, ஓவியப போட்டிகள் அண்மையில் முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரி யில் நடாத்தப்பட்டது.

இப்போட்டிகளில் பேச்சுப் போட்டியில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. கீழ்ப்பிரிவு பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தை லோ. அனாஎப்சியா பெற்றுக் கொண டார். மத்திய பிரிவுப் போட்டியில் முதலாம் இடத்தை ம.தாமரைச் செல்வி பெற்றுக்கொண்டார். மேற பிரிவில் செல்வன். ம.ஜெறோம முத லாம் இடத்தைப் பெற்றுக்கொண் டார். நடாத்தப்பட்ட போட்டிகளில் பேச்சுப் போட்டியில் முல்லை. மகா வித்தியாலயம் முதன்மையான இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப் பிடத்தக்கது. (20)

## கிளி. இலங்கை வங்கிக்கு புதிய முகாமையாளர் நியமனம்

இலங்கை வங்கிக் கிளையின் முகாமை யாளராகப் பணிபுரிந்து வந்த சபா. திருச்செல்வன் பிரதேச முகாமையா ளராகப் பதவிஉயர்வு பெற்று யாழ். சந்திரநாயகன் (சந்திரன்) பதவியி னைப் பொறுப் பேற்றுள்ளார்.பதவி உயர்வு பெற்ற முன்னாள் முகாமை யாளருடன் தற்போதைய முகாமை




தலைமைக் காரியாலயத்தில் பதவி யினைப் பொறுப்பேற்றுள்ளார் தற்போது கிளிநொச்சி இலங்கை வங்கிக்கிளை யின் முகாமையாளராக அகோபால யாளரும், ஊழியர்களும் சென்ற வாரம் இடம்பெற்ற பிரியாவிடை நிகழ் வில கலந்துகொண்டுள்ளமையினைப் படத்தில் காணலாம் (படம்-சோதி)

**-காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ளதால்-**

## முல்லை.யில் கால்நடைகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2004ஆம் ஆண்டுக்கான கால போக நெற்செய்கைக்காலம் ஆரம் பிக்கப்பட்டுள்ளதால் கால்நடை களை உடன் கட்டுப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்கான காலப்பகுதி நேற்று ஆரம்பமாகியுள்ளது. இது 15.03. 2005 வரை நடைமுறையில் இருக் கும் எனவே கால்நடைகளை பகலில் ஆள்நின்று மேய்த்தும், இரவில் பட்டிகளில் அடைத்தும் கட்டுப்படுத்து மாறு முல்லை. மாவட்ட கமநல அபி விருத்தி உதவிஆணையாளர் க.தர்ம லிங்கம் கேட்டுள்ளார். அத்துமீறி கால்நடைகள் பயிர்ச்செய்கை நிலங் களுக்குள் உள்நுளையுமாயின் அவை பிடிக்கப்படும் மேலும் பயிரழிவை ஏற்படுத்தி இருப்பின் அழிவு நட்டங் களும் கால்நடைச் சொந்தக்காரர் களிடமிருந்து அறவிடப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

மறுக்கின்ற கால்நடை சொந்தக் காரர்களுக்கு எதிராக கமநல அபிவிருத்தித் திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து காலபோகக் கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரி வித்தார்.

எனவே கமக்கார அமைப்பினர் விவசாய அபிவிருத்திக்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கால்நடைக்காரர்களுடன் கலந்து ரையாடி கால்நடைகளைக் கட்டுப் படுத்த ஒழுங்களை மேற்கொள்ளு மாறு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (20)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பல் கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களின் சுயவிபரங்கள் தேவைப்படுவதால் அவர்களுக்கான அவசர கலந்துரையாடல் கிளி நொச்சி மாவட்ட பல்கலைக் கழக புகுமுக மாணவர் ஒன்றிய அலுவலகத் தில் 17.10.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடை பெறும் அனைத்துப் புகுமுக மாணவர் களையும் தவறாது கலந்து கொள்ளு மாறு பல்கலைக கழகபபுகுமுக மாணவா ஒன்றியத்தலைவர் கேட்டுக் கொள்கின்றார்.

**கண்டெடுப்பு**

(அலுவலக செய்தியாளர்)

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த என்.நடராஜன் என்பவரது உந்துருளியின் ஆவணங்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கிளிநொச்சி பரந்தன் சந் திக்கும் கரடிப்போக்குச் சந்திக்கு மிடையில் மூளாய் முருகன் என்ப வரால் கண்டெடுக்கப்பட்டு கிளி நொச்சி ஈழநாதம் விளம்பரப் பணி மனையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது மேற்படி ஆவணங்களை உரி யவ் அலுவலக நேரத்தில் சமுகம் கொடுத் துப் பெற்றுக்கொள்ளவும். (சோ)

## மான் இறைச்சி விற்பனை செய்த நபர் பொலிசாரால் கைது

வவுனியா நகர்ப்பகுதியில் மான் இறைச்சி விற்பனை செய்து வந்த நபர் ஒருவர் கைது செய்யப் பட்டிருப்பதாக வவுனியாப் பொலி சார் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே மேற்படி நபர் இவ்வாறு காட்டு விலங்கு களை வேட்டையாடி விற்று வந்த தாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ ரின் வீட்டில் அனைத்து வகையான காட்டு விலங்கு இறைச்சிகளும் பெறமுடியும் என்றும் தெரிவிக் கப்படுகிறது. வீட்டைப் பொலிசார் சோதனையிடச் சென்றபோது இரண்டு மான் குட்டிகளும் இருந்த தனைப் பொலிசார் கண்டுபிடித் துள்ளனர். இவருக்கு எதிராக வவு னியா நீதிமன்றில் வழக்குத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது. (21)

## பூநகரி கறுக்காய்த்தீவுப் பகுதியில் வீட்டுமுற்றத்தில் விடுதலை கானங்கள்

வீட்டு முற்றத்தில் விடுதலைக் கானம் நிகழ்வு கடந்த 6ஆம் திகதி பூநகரி கறுக்காய்த்தீவு ம.வி.யில் நடைபெற்றது. பூநகரி தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் சி.சிவப் பிரகாசம் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் தலைவர் தமது தலைமை உரையில்; சமாதானம் பற்றிய இன்றைய நிலையும், மக் களும் என்ற தலைப்பில் உரை யாற்றினார். அடுத்து போராளி ஊர வனின் விடுதலைக்கானங்கள் என்ற நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து மாணவரின் கலை நிகழ்வுகளும் ஓய்வு பெற்ற அதிபர் வே.முத்துக்குமாரு அவர்களின் ஒன்றுமையின் முக்கியத்துவம் பற்றிய கவிதைகளும் இடம் பெற் றன. தொடர்ந்து சுகாதாரம் தொடர் பாக போராளி கலைக்குமரனும், விடுதலைப் போராட்டம் தொடர்பாக போர்ப் பிரியனும், தலைமைத் துவம் தொடர்பாக பூநகரிப்பிர தேசப் பொறுப்பாளர் ஈகைவேந்தனும் கருத்துரை வழங்கியதுடன் சிபொன்னம் பலம் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

இந்நிகழ்வு முடிவடைந்ததைத் தொடர்ந்து வீடுவீடாகச் சென்று மக் கள் சந்திப்பு இடம் பெற்றது. அதன் போது மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்கான தீர்வு சம் பந்தமாக உரியவர்களிடம் கலந்து ரையாடப்பட்டது. (34)

## பரிசளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெப் நிறுவனத்தின் அனு சரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக கழகத்தினால் மேற்கொள்ளப் படும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் களின் நலன்காக்கும் திட்டத்தின் விழிப்புணர்வுப் பிரசாரத்தின் பரி சளிப்பு விழா இன்று பி.ப 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்ட பத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் சான்றிதழ்களும், பரிசில்க ளும் வழங்கலுடன் நாடக ஆற்றுகை யும் இடம்பெறவுள்ளது. (சோ)

## மருத்துவமாது பரீட்சையில் தேறியோருக்கு வவுனியாவில் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

அண்மையில் நடைபெற்று முடிந்த மருத்துவமாது நேர்முகப் பரீட்சையில் தேறியவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வுள்ளன.

முதற்கட்டமாக ஒரு தொகுதியி னருக்கு இப்பயிற்சி வழங்கப் படுகிறது. 3 மாத காலத்திற்கான இப்பயிற்சியானது வவுனியா பொது தாதிய பயிற்சி மண்டபத் தில் நடைபெறவுள்ளது. இவர் களை 18.10.2004 அன்று மேற்படி நிலையத்திற்குச் செல்லுமாறு கிளி நொச்சி மாவட்ட மாகாணசுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

பயிற்சி நெறிக்குத்தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வரு மாறு, மகேந்திரராஜா வாயினி C/O மகேந்திரராஜா D.H கிளிநொச்சி, சண்முகம் சிவாநந்தினி திக்கவயல், அல்வாய் வடமேற்கு அல்வாய், கஜேந்திரன் சுசீலா அரசினர் வைத் தியசாலை விடுதி அக்கராயன் குளம் கிளிநொச்சி, இராமசாமி பன்னீர்ச்செல்வி இல:52 கோணா வில் கிளிநொச்சி, செல்லத்துரை வசந்தமலர் இல:14/6 யுனிற் 9 பூந் தோட்டம் வவுனியா, செல்வநாய கம் சுகந்தினி கண்டிவீதி பளை, சீவரட்ணம் சங்கீதா செட்டிய குறிச்சி பூநகரி, லோகநாதன் லோகதீபா இல: 104 கோவில் வீதி குருமன் காடு வவுனியா, இரத்தினசிங்கம் சுமங் கலி இல:8 கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி, இரவீந்திரன் கவிதா வலயக்கல்விப்பணிமனை கிளி நொச்சி, கணேசன் சுகந்தினி R.மல் லிகா DH கிளிநொச்சி, ரம ணன் வித்தியா இல:68 D-10 உருத்திரபுரம கிளிநொச்சி, தங்கராஜா கவிதா நல்லூர் பூநகரி, முருகேசு குமு தினி இத்தாவில் பளை, கனகசபாரட் ணம் சங்கீதா இல:238 சில்வா வீதி வட்டக்கச்சி.

# மாதகல் மேற்கில் 1,500 குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரிக்கை

## வெகுசன போராட்டங்களுக்கும் முயற்சி

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாதகல் மேற்குப் பகுதியில் சுமார் 1500 குடும்பங்கள் தங்களை மீளக் குடியமர அனுமதிக்குமாறு சிறிலங்கா படைத்தரப்பிற்கு நிர்ப்பந்தம் கொடுத்து வருகின்றன. இதற்கு சரியானதொரு தீர்வு கிடைக்காது போனால் வெகுசனப் போராட்டங்களை நடத்தவும் அவர்கள் திட்டமிட்டு வருகின்றனர்.**

யாழ்,மாதகல் மேற்குப்பகுதியில் உள்ள இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயங்களுள் முடக்கி வைக்கப்பட்டுள்ள தமது சொந்த இடங்களை விடுவித்து அப்பகுதிகளில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதிகளை படையினர் ஆக்கிரமித்துள்ளதால் அங்கிருந்து இடம் பெயர்ந்த சுமார்1500 குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர முடியாது அகதிமுகாம்களில் அடிப்படை வசதிகள் அற்றநிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு சொந்த இடங்களில் குடியேற முடியாததனால் தாம் எதிர் கொண்டுள்ள சமூக, பொருளாதார நெருக்கடிகளைக் சுட்டிக் காட்டி மேற்படி கோரிக்கையை விடுத்துள்ள மக்கள் தமது கோரிக்கைகளுக்குப் படைத்தரப்பு மதிப்பளிக்காவிட்டால் வெகுசனப் போராட்டங்களில் ஈடுபடப் போவதாகவும் எச்சரித்தனர். (33)

# மீனவக் குடும்பங்களின் தொழில் மேம்பாட்டுக்கு உதவி

யாழ். காரைநகர் பகுதி வாழ் மீனவக் குடும்பங்களின் தொழிற்றுறை மேம்பாட்டிற்கான உதவிகளை வழங்குவதற்கு 'போரூட்' நிறுவனம் முன்வந்திருக்கின்றது.

அந்த அடிப்படையில் காரைநகர் பிரதேச வாழ் மீனவக் குடும்பங்களுக்கென கடற்றொழில் உபகரணங்களை வழங்கிவரும் இந்நிறுவனம் அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

கடந்த கால யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களது நலனைக் கவனத்தில் கொண்டே இவ் உதவிகளைப் 'போரூட்' வழங்கி வருகிறது. (33)

# பாஸ்நனைந்திருந்ததால் படையினர் கடற்றொழிலாளி மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவர் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை இறங்குதுறைப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் செ. செல்வேந்திரன் (வயது-26)என்பவரே தாக்குதலுக்கு இலக்கானவராவார்

பிரஸ்தாபநபர் கடற்றொழிலுக்குச் சென்ற வேளை அவர் கொண்டு சென்ற பாஸ் நீரில் நனைந்து பழுதடைந்திருப்பதைக் காரணம் காட்டியே இவரை கடற்படையினர் தாக்கியிருக்கின்றனர்

இதேவேளை வல்வெட்டித் துறை கடற்றொழிலாளர் மீதான பாஸ் கெடுபிடிகளை அதிகரித்திருப்பதாக அப்பகுதி கடற் றொழிலாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (33)

# குப்பிளானில் மிதிவெடி அகற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குப்பிளான் பகுதியில் உள்ள தனியார் காணிகள் மற்றும் பொது இடங்களில் சிறிலங்காப் படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை டென்மார்க்கைச் சேர்ந்த டெனிஸ் மிதிவெடிகள் அகற்றும் குழுவினர் ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் உள்ள தனியார் காணிகள் மற்றும் பொது இடங்களில் காணப்படும் மிதிவெடி அபாயத்தினால் இப்பகுதி மக்களின் மீள்குடியமர்வுகள் தாமதமடைவதைக் கவனத்தில் கொண்டே இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (33)

# கழிவுப்பொருட்களால் துர்நாற்றம்வீசுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் உள்ள தொடரூந்து நிலையப்பகுதியில் கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பலத்த சிரமத்தினை எதிர்கொள்வதைக் காணமுடிகின்றது. (15)

# வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவருக்கு தியாகி அறக்கொடை நிலையம் நன்கொடை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களிற்கு தியாகி அறக்கொடை நிலையம் நன் கொடைத் திட்டம் ஒன்றினை நடை முறைப்படுத்தி வருகிறது.

யாழ். நல்லூர்ப்பகுதியில் இயங்கி வரும் தியாகி அறக்கொடை நிலையம் யாழ்.மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களிற்கு மாதமொன்றிற்கு 5இலட்சம் ரூபாய் வரை ஒதுக்கப்படுவதாகவும், வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பெண்களின் நலவாழ்வுக்கான தையல் பயிற்சி நெறியினை கொடிகாமம், கைதடி, நல்லூர் பகுதிகளில் நடாத்தி வருவதாகவும் இதில் 60 வரையான பெண்கள் கல்வி கற்று வருவதாக இந் நிலையத்தின் நிர்வாக உறுப்பினரும்; பொருளாளருமான ஆசிரியை திருமதி ஸ்ரீதேவி தெரிவித்துள்ளார்.

நல்லூர் நாவலர் வீதிப் பகுதியில் சிறப்பு அங்காடி(Super Market) ஒன்று அமைக்கப்பட்டு அங்கு பணியாற்றுவதற்காக விதவைகள் இணைக்கப்பட உள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து புலம் பெயர்ந்து சுவிற்சர்லாந்து நாட்டில் வசிக்கும் வா.தியாகேந்திரன் என்பவரால் இந் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (15)

# நுணாவில் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியின் நுணாவில் பிரதேசத்தில் அண்மைக்காலமாக திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மக்களின் இயல்பான வாழ்விற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் இத்தகைய திருட்டுச்சம்பவங்கள் குறித்து சிறிலங்காப் பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளபோதும் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்து திருட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# கணித, தமிழ் ஆங்கிலப்பாட அறிவினை மேம்படுத்த நடவடிக்கை

யாழ். மாவட்ட மாணவர்களிடையே கணிதம், தமிழ் மற்றும் ஆங்கில பாடம் சம்பந்த அறிவினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெவ்) ஈடுபட்டுள்ளது.

அந்த அடிப்படையில் யாழ்.மாவட்ட பாடசாலைகளில் தரம் 9முதல் 11 வரையிலான வகுப்புகளில் கற்று வரும் மாணவர்களுக்கு கணிதம், தமிழ் மற்றும் ஆங்கிலம் சம்பந்தமான இலவச வகுப்புகளையும் வழிகாட்டல் கருத்தரங்குகளையும் ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடத்திவருகிறது.

இந்நடவடிக்கைகள் யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களிலும் சிறப்பாக முன்வைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# டிறிபேக் கல்லூரி அபிவிருத்திக்கு ஜேர்மன் நிறுவனம் நிதிஉதவி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் உள்ள டிறிபேக் கல்லூரியின் அபிவிருத்திக்கென ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் 6 மில்லியன் ரூபா நிதியினை வழங்கியுள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட இப்பாடசாலையின் வகுப்பறை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காகவே இந்நிதியை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஒதுக்கியுள்ளது. இந்நிதியின் மூலம் இப்பாடசாலையில் வகுப்பறைத் தொகுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (33)

## கொடிகாமத்தில் சில பகுதிகளில்

# மீளக்குடியமர்ந்த 600 குடும்பங்களுக்கு 25,000 ரூபா கொடுப்பனவு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு சிறிலங்கா அரசால் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட ரூபாய் இருபத்தையாயிரம் நிதி இதுவரை இப்பிரதேசத்தில் பரவலாக வழங்கப்படாத நிலையில் தற்பொழுது கொடிகாமம் பிரதேசத்திற்கு உட்பட்ட சில பகுதிகளிலுள்ள 600 குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மீளக்கொடுப்பனவு நிதி வழங்கப்பட இருப்பதாக தென்மராட்சி பிரதேச செயலக வட்டாரங்கள் தொிவிக்கின்றன. சமாதான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதற்கு பின்னால் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்து வரும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்த நிதி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தால் மீளக்குடியமர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் சிரமப்படுவதாகத் தெரிய வருகிறது. (28)

# இடப்பெயர் சேவைகளில் பிறப்பு, இறப்பு பதிவு செய்தோர் கவனத்திற்கு

வடக்கு-கிழக்கில் கடந்த வருடம் பல இடப்பெயர் சேவைகளை செய்து, மக்களுக்கு உதவி செய்த ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளர் நாயகம் அவர்களால் அனுமதித்து, ஒப்பமிட்டு உரிய மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் சமர்ப்பித்து தினமுத்திரையும், இலக்கமும் இட்டபின் உரிய பதிவாளர்களிடம் கொடுத்து பதிவு செய்யும்படி கூறி சான்றிதழுக்குரியவர்களிடம் நேரடியாக கையளிக்கப்பட்ட பிரதிக்கினைகளை உடன் உரியவாறு மே.மா பதிவாளரிடம் சமர்ப்பிக்காது வைத்திருந்த பலர் தற்போது அவற்றை பதிவதற்காக நேரடியாக கிராமிய பதிவாளர்களிடம் கொண்டு வருவது யாழ். உதவிப் பதிவாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அப்படியான பிரதிக் கினைகளை பிறப்புச் சான்று என்று நினைத்து தம்வசம் வைத்திருக்கும் மக்கள் அவற்றை தாங்கள் வசிக்கும் மாவட்டத்துக்குரிய மாவட்டப் பதிவகத்தில் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அப்படிக் கையளித்தால் பதிவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். காலம் தாழ்த்தினால் அவை செல்லுபடியற்றதாகிவிடும்.

வடக்கு-கிழக்கில் கடமைபுரியும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களிடம் இவ்வாறான பிரதிக்கினைகள் கிடைக்கப்பெறின் அவற்றை தங்கள் பகுதிக்குரிய மேலதிக மாவட்டப் பதிவாளரின் கவனத்திற்கு உடன் கொண்டு வருமாறு இது தொடர்பாக உதவிப் பதிவாளர் நாயகத்தால் மேலதிக மாவட்டப் பதிவாளர் ஊடாக செயற்பட்டு மக்களுக்கு உதவுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# புங்குடுதீவுப் பிரதேசத்திற்கு அடிப்படை வசதிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் போதியளவு அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மேற்படி பிரதேசத்தில் தற்பொழுது சுமார் 5ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

எனினும், இப்பகுதி மக்களுக்கு உரிய வைத்திய சேவை வசதிகள், தபால் தொலைத் தொடர்பு வசதிகள், அடிப்படை சுகாதாரம் பேணுவதற்கான வசதிகள், கல்வி மேம்பாட்டிற்கான வசதிகள் திருப்திகரமான பேருந்துப் போக்குவரத்து வசதிகள், தொழில் துறை, பொருளாதார மேம்பாட்டிற்கான வசதிகள் என்பன உரிய முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.


இதனால், இங்கு மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் பின் தங்கிப்போயுள்ளதாக அப்பகுதி பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (33)

# தொல் படிவங்கள் எவற்றை எடுத்துச் சொல்கின்றன?

பாறையில் உள்ள தொல் படிவங்கள் தாவரங்கள் , உயிரினங்களின் தோற்றத்தைமட்டுமல்ல உயிரினங்களின் நகர்வையும் பற்றி எடுத்துச் சொல்கிறன. பதிவான அடிச்சுவடுகளை வைத்து உயிரினங்களின் உயரம் , நிறை, பாதங்களின் தோற்றம், அவை ஊர்வனவா அல்லது ஓடக் கூடியவையா, அல்லது தெத்தித் தெத்தி கங்காரு போல் நடந்தவையா என்பதை புதைபொருள் ஆராய்ச்சிக் காலத்துக்கு முன்னரான காலத்து ஆராய்ச்சியாளர்களால் ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. அடிச்சுவடுகள் ஒரே இடத்தில் கண்டுபிடிக்கப்படின் அக் காலத்தில் அச்சுவடுகளைக் கொண்ட மிருகங்கள் கூட்டமாக ஒரே இடத்தில் வாழ்ந்தவை என்பதை எடுத்துச் சொல்கிறது. டைனோசர் இனம் கூட்டமாகவே வாழ்ந்தவை என்பதை இக்கண்டுபிடிப்புகள் எடுத்துச்சொல்கிறது. உயிரினங்களில் இருந்து வெளியேறிய கழிவுகள் கூட பல இரகசியங்களை எடுத்துச் சொல்கிறது. அக்கழிவுகளை வெளியேற்றிய மிருகங்கள் தாவரத்தை மட்டும் உணவாகக் கொண்டவையா அல்லது மாமிசம் உண்பவையா என்பதை எடுத்துச்சொல்கிறது. பதிவாகிய பற்களின் தோற்றமும் , எலும்புகளின் தோற்றமும் மிருகங்களைப்பற்றி எடுத்துச்சொல்லும். இது தற்காலத்தில் பல வருடங்களுக்கு முன் இறந்த ஒருவரைப்பற்றி அறிய உதவும் தடய மருத்துவம் போன்றது. பாறைப் பதிவுகள் ஓரிடத்தில மட்டும் அமையாது பரந்து இருப்பதில் இருந்து பருவகாலமாற்றத்தை பற்றி அறியக் கூடியதாகயிருக்கிறது. வெப்பம் நிறைந்த பருவசூழ்நிலையில் வாழும் உயிரினங்களுக்கும் குளிர் பிரதேசத்தில் வாழும் உயிரினங்களிறகும் உருவ அமைப்புகளில் வித்தியாசங்களுண்டு. கடலுக்கடியில் வாழ்ந்த உயிரினங்களின் பதிவுகள் கடலின் ஆழத்தைப்பற்றி எடுத்துச்சொல்கின்றன. கனேடிய ஆர்டிக் பகுதி 50 மில்லியன் காலத்திற்கு முன்னர் குளிரற்ற வெப்பப் பகுதியாக இருந்தது என்பதை பாறைப் பதிவுகள் எடுத்துச் சொல்கிறன.கண்டங்கள் எவ்வாறு பல மில்லியன் ஆண்டுகளாக மாற்றமடைந்து வந்துள்ளன என்பதையும் பரவலாக கண்டுபிடிக்கப்பட்ட மிருகங்களினதும் தாவரங்களினதும் பாறைப் பதிவுகள் விளக்குகின்றன. தொல் படிவங்களின் வயது கணிப்பை கதிர்வீச்சுத் தன்மையுடைய கார்பன் 14இன் உதவியுடன் மேற்கொள்ளலாம். கார்பன் 14 இன் அணுக்கள் சிதைந்து கார்பன் 12ஆக மாறுகிறது. அணுக்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைவதற்கு சுமார் 5000 ஆண்டுகள் எடுக்கிறது. ஆகவே கார்பன் 14இன் அரை வாழ்வுக் காலம் (Half Life Period) 5000 ஆண்டுகளாகும். இந்த குறைவான வாழ்வுக் காலத்தினால் வயதுக் கணிப்பு 50,000 ஆண்டுகள் வரை மட்டுமே முடியும். கூடிய அரைவயதுக் காலத்தைக் கொண்ட உலோகங்களின் உதவியுடன் நீண்ட கால வயதினைக் கணிக்கலாம். மரத்தண்டில் உள்ள வளையங்களைக் கொண்டும் வயதினைக் கணிக்கமுடியும்.

# சிகரெட் புகையில் 3000 இரசாயனங்கள்

சிகரெட்டில் 3000 திற்கும் மேற்பட்ட இரசாயனங்கள் அடங்கியுள் அடங்கியுள்ளதாகவும், இதனால் இரத்த நாளங்களில் குருதி ஓட்டம்



தடைப்பட்டு புகைப்பிடிப்பவர்கள் அதிகமாக புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனரெனவும் புருக்ஹெவன் விஞ்ஞானபீடம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துளதாக புருக்ஹெவன் தேசிய விஞ்ஞானிகளின் ஜொஹானா புவுளர் தெரிவித்துள்ளார்.


புகையில் அதிகமாக நிக்கொட்டின டன் நுரையீரல் அதிகம் பாதிக்கப்பட்டு புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாக அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிவேக கணினி விற்பனைக்கு

லோர்ட்ப் தி ரிங்க்ஸ் என்னும் ஆங்கிலத் திரைப்படத்திற்கு பயன்படுத்தப்பட்ட சூப்பர் கணினி விற்பனைக்குத் தயாராக உள்ளது. உலகின் அதிக சக்தி வாய்ந்த 500 சூப்பர் கணினிகளில் 60 ஆவது இடத்தில் உள்ளது இந்தக் கணினி. 1 விநாடியில் 2.8 இலட்சம் கோடி கணக்கீடுகளைச் செய்யவல்லது இந்தக் கணினி. இந்தக் கணினியின் உரிமையாளர்கள் லோர்ட்ப் தி ரிங்க்ஸ் இயக்குனர் ஜாக்சன் மற்றும் ஜியோ ஐ நிறுவனம் இதன் திறனை மேலும் அதிகரித்து உலகின் அதிக சக்தி வாய்ந்த கணினிகளின் பட்டியலில் முதல் 10 இடங் களுக்குள் இடம்பெறச் செய்ய முடியுமாம் லோர்ட்ப் திரிங்க்ஸ் படத்தில் வரும் சிறப்புக் காட்சிகள் இந்தக் கணினி யின் உதவியோடு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நோய்கள், விபத்துக்கள் குறித்து முன் எச்சரிக்கை விடுக்கும் கருவி

மனிதனுக்கு ஏற்படும் நோய் சம்பந்தமான அறிகுறிகளையும், யிலுள்ள ஒருவர் செலுத்த முடியாது. காரணம் வாகன இயந்



விபத்துக்கள் தொடர்பான முன் எச்சரிக்கையையும் விடுக்கும் சிலிக்கனினாலான உணர்கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக நோய்வாய்ப் பட்டிருப்போர்களைப் பரிசோதனை செய்ய பயன்படுத்தப் படும் இக்கருவிகள் தற்போது வாகனங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன.

இக்கருவி பொருத்தப்பட்டுள்ள வாகனத்தை மது போதை திரம் இந்நிலையில் இயங்க மறுகும் என கூறப்படுகிறது.

இதனைத் தயாரித்தவர் மியுனிச் தொழில் நுட்பப்பிரிவின் பிரதம தொழில் நுட்பவியலாளரான கலாநிதி மக்ஸ் பிளைஸ்ஸர் ஆவார். பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தமது தொழில்நுட்பம் சரியான முறையில் நடைபெறுகிறதா என்பதையும் இக்கருவி அறிவித்து விடுகிறது எனக் கூறியுள்ளார்.

ஆஸ்மா நோயால் பாதிக்கப்படுவோரின் சுவாசச் செயற்பாடுகளைத் தெளிவாக இனங்காண இக்கருவி வைத்தியர்களுக்கு உதவுகின்றது.

தற்காலிகமாக ஆஸ்மா நோயிலிருந்து குணமாகியிருப்போர் மீண்டும் பாதிக்கப்படும் சந்தர்ப்பம் பற்றி இக் கருவி முன் கூட்டியே அறிவிக்கக் கூடியதாகவுள்ளது.

திடீர் தீ விபத்தின் போது தீயணைக்கும் படையினருக்கும் இக் கருவி உதவக்கூடியதாகும். தீ மேலும் பரவாதிருக்கவும் முன் எச்சரிக்கை வழங்கவும் கருவி பயன்படுகிறது. உண்மையாக தீப் பற்றுவதற்கு முன்பாக அதற்கான காரணத்தை இக்கருவி கண்டுபிடிக்கக் கூடியது என்று கண்டுபிடித்தவரான பிளைஸ்ஸர் கூறுகிறார். நீண்டதூரப் பயணம் மேற்கொள்வோர் அசுத்தவாயுக்களை சுவாசிக்கக் கூடியசந்தர்ப்பம் பற்றி முன் கூட்டியே அறிவித்து விடும் இக்கருவி சதுர வடிவிலான எங்கும் எடுத்துச் செல்லக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# அச்சுறுத்தும் 'சிலந்திகள்'



சிலந்திப் பூச்சியில் நூற்றுக் கணக்கான வகை சிலந்திகள் உள்ளன. பெரும் பாலும் ஆபிரிக்கா காடுகளில் கொடிய விஷம் உள்ள சிலந்திகள் உள்ளன. தெற்கு இங்கிலாந்தில் உள்ள ஒரு பள்ளிக்கூட அறையில் அண்மையில் சிலந்தி நுழைந்து விட்டது. இதுவும் ஆபிரிக்க சிலந்திதான்.


உள்ளங்கை அளவுக்கும் அதிகமான அளவுள்ள இந்தச் சிலந்தியை பார்த்து அங்குள்ள மாணவர்கள் பீதியில் ஓடினார்கள். பூச்சியியல் துறை நிபுணர்கள் உடனடியாக வரவழைக்கப்பட்டனர். அதைக் கொல்லாமல் அதிகாரிகள் உயிருடன் பிடித்துச் சென்றனர்.

# நாரைகளைக் காப்பாற்றிய முதலை

சைப்ரஸ் நாட்டில் 2000 நாரைகளின் உயிரை முதலைகள் காப்பாற்றி உள்ள சம்பவம் நடந்துள்ளது. முதலைகள் இன்னொரு பிராணிகளின் உயிரைக்காக்கிறது. என்ற செய்தி நம்பமுடியாமல் இருக்கும் இது போலி முதலைகள் பற்றிய செய்தி சைப்பிரஸ் நாட்டில் ஒரு ஏரியின் தண்ணீரில் ஈயம் கலந்து விட்டது. அதனால் அங்கு இறங்கிய 40 பறவைகள் செத்தன. அதையடுத்து போலி முதலைகளை மிதக்க விட்டனர். அந்த முதலைகளை பறந்தபடியே பார்த்த நாரைகள் ஏரியில் இறங்காமல் சென்று விட்டன. அதன் மூலம் ஏரியில் இறங்கி சாகவிருந்த நாரைகள் காப்பாற்றப்பட்டன. அந்த ஏரியை வழக்கமாக 2000 நாரைகள் பயன் படுத்திவந்தன. அவற்றைப் புத்தி சாலித்தனமாக பறவை ஆராய்ச்சியாளர்கள் பாதுகாத்து இருக்கிறார்கள்.

# கட்புலனற்றோருக்கு சலவை இயந்திரம்

உலகில் தற்போது சலவை செய்யும் இயந்திரங்கள் பெருமளவில் பாவனையிலுள்ளன. ஆயினும் தற்போது புதுவித சலவையந்திரம்



ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அது கட்புலனற்றோருக்கானது.

இச்சலவையந்திரத்தை அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகப் பொறியியல் மாணவர் குழு உருவாக்கியுள்ளது. இது முன்னைய தயாரிப்பின் நகல் ஆயினும் இது பொத்தான்களை அழுத்துவதன் மூலம் இயக்கப்படுவதுடன் ஆடைகள் சலவை செய்த பின் இதில் பொருத்தப்பட்டுள்ள ஒலிக்கருவி மூலம் சமிக்ஞை காட்டப்படும்.

இக் கருவி கண்பார்வையற்ற இரு தம்பதியினரால் பரிசோதிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவர்கள் கருத்துத் தெரிவித்தபோது, இது ஒரு அற்புதமான தயாரிப்பு எனவும் அவர்களுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இக் கருவியில் மணிக்கூட்டின் முகப்பின் தோற்றம் போன்ற அமைப்பு காணப்படுகிறது. அப்பகுதியிலிருந்தே ஒலி எழுகிறது என்று கூறும் பல்கலைக்கழகப் பேராசிரியர், வரும் காலங்களில் இதனை மேலும் விருத்தி செய்து அறிமுகப்படுத்தலாம் என்று தெரிவிக்கிறார்.


# இயந்திர மனிதர்களின் ஓட்டப் போட்டி

லித்வேனியாவில் இயந்திர மனிதர்களுக்கிடையிலான போட்டியொன்று இடம்பெற்றது. இந்த இயந்திர மனிதர்கள் போட்டி அங்கிருந்த பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. இவற்றை உருவாக்குபவர்களின் படைப்பாற்றலை விளக்கும் நோக்குடன் லித்வேனியாவில் இப்போட்டி நடைபெற்றது. கல்லூரி மாணவர் மற்றும் இளம் பொறியியலாளர்களைக் கொண்ட குழுவினர் தாங்கள் உருவாக்கிய இயந்திர மனிதர்களைப் போட்டியில் பங்கு கொள்ளச் செய்தனர்.

றோபோக்கள் ஒவ்வொன்றும் ஒரு கண்ணாடிக் குவளையினுள் இருக்கும் முட்டைகளை எடுத்துக் கொண்டு 6 மீற்றர் தூரம் ஓடிச் சென்று மற்றொரு கண்ணாடி குவளையினுள் வைப்பதே இப் போட்டியாகும். இந்த போட்டியில் பங்குபற்றிய றோபோக்களின் செயற்பாடு பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

# ஒக். 1 முதல் நடைமுறைக்கு வந்துள்ள குற்றவியல் நடைமுறை எண் சட்டம்

அ. லோகீசன்



**இம்மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள தமிழீழ குற்றவியல் நடைமுறை எண்சட்டம் குறித்து தலைமை நீதியாளர் திரு. சி. ஒப்பிலான் அவர்கள் அளித்த விளக்கம் இங்கு தரப்படுகிறது.**

திடமான சட்ட நடவடிக்கைக்குட்பட்டு குற்றவியல் வழக்குகளை அணுகக் கூடியதாகவும் அதற்கான சரியான தீர்வைக் கொடுக்கக் கூடிய வகையிலும் எங்களது நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கும் இம்மாதம் முதலாம் நாள் முதல் நடைமுறைக்கு வந்திருக்கும் குற்றவியல் நடைமுறை எண் சட்டம் மிகவும் இலகுவாக அமைந்திருக்கும். இவ்வாறு தமிழீழ மாவட்ட நீதிமன்றங்களின் தலைமை நீதியாளர் திரு. சி. ஒப்பிலான் தெரிவித்துள்ளார்.

தலைமை நீதியாளர் இந்தச் சட்டம் தொடர்பாக மேலும் விளக்கமளிக்கையில்,

இந்தச் சட்டக் கோவை ஆரம்பத்தில் புலன் விசாரணைகள் பற்றியும், நீதிமன்றத்தில் முற்படுத்தப்படும் நடவடிக்கைகள் பற்றியும், குற்றப் பத்திரங்கள் என்ன ஒழுங்குகளில் தாக்கல் செய்யப்பட வேண்டும்? அழைப்புக்கட்டளைகளை எவ்வாறு ஏற்க வேண்டும்? அறிவித்தல்களை எவ்வாறு ஏற்க வேண்டும்? என்பனபற்றிய படிவங்களின் ஒழுங்குகள் பற்றியும், காவல்துறைக்கும், நீதிமன்றங்களுக்கும் இடையில் உள்ள நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்குரிய ஆவணங்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்ற நடவடிக்கைகளையும் நீதிமன்றங்களுக்கும் கட்டளைகளுக்கும் இடையில் உள்ள ஆவணங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றியுமான பக்கங்களை இதனுள் உள்வாங்கி இருக்கிறோம்.

இதற்கும் மேலாக மன்றில் பிணைகள் அனுமதிப்பதற்கான நடைமுறைகள் பற்றியும், மனித உரிமைகள் பேணக்கூடிய வகையில் சில உள்ளார்ந்தத் தன்மைகள் உள்வாங்கப்பட்டு இந்தச் சட்டக் கோவை ஆக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஒரு குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட நபர் 48 மணித்தியாலங்களுக்குள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட வேண்டும் என்ற விடயம் ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. அதனை அண்டியதாகத்தான் ஏனைய பிரிவுகளும் உள்வாங்கப்பட்டு கைது செய்யப்பட்டவர்களின் நலன் பேணும் வகையில் சட்டத்தின் நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

இதனைவிட ஏதாவது குற்றத்திற்காக கைது செய்யப்பட்டவர்களுக்கு பிணை வழங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் எவை? பிணை விடக்கூடிய குற்றங்கள் எவை? பிணை விடமுடியாத குற்றங்கள் எவை? என்பன பற்றி விரிவாக வரையறுக்கப்பட்டு அதற்கான படிமங்கள்,சாட்டுக்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் எத்தகைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் செல்ல முடியும். எத்தகைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் செல்ல முடியாது என்பன பற்றி வரையறுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதேவேளை, இதன் நடவடிக்கைகளை நீதிமன்றங்கள் எவ்வாறு கையாளலாம் என்பது பற்றிய விதி விலக்கான சந்தர்ப்பங்களும் இதனுள் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. நீதிமன்றங்களின் செயற்பாடுகளை இலகுபடுத்தக் கூடிய வகையிலும் அதே வேளை, சந்தேக நபராக கைது செய்யப்பட்ட ஒருவரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையிலும் இந்தச் சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு குற்றச் செயல் நடைபெற்றிருந்தால் அது எந்த வகையில் நீதிமன்றத்திற்குள் உள்வாங்கப்பட்டு விசாரிக்கப்பட்டு எந்தப் படிமுறை ஒழுங்குகளில் அந்த வழக்கைக் கொண்டு சென்று அதற்கான தீர்ப்பை எந்த ஒழுங்குகளில் வழங்க வேண்டும் என்றும், தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் அதனை எந்த ஒழுங்கில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது பற்றியும் சொல்வது தான் இந்தக் குற்றவியல் நடைமுறைஎண் சட்டம்.

தமிழீழத்தின் சட்டங்கள் அனைத்தும் தமிழீழச் சட்டவாக்கச் செயலகத்தினால் வெளியிடப்படுகின்றன. அந்த வகையில் இந்தச் சட்டமும் சட்டவாக்கச் செயலகத்தால் வெளியிடப்பட்டதாகும்.

தமிழீழ நீதிமன்றில் குற்றவியல் மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம் என்ற இரு பிரிவுகள் இருக்கின்றன. மேல் நீதிமன்றத்தில் குற்றவியல் சார்ந்த வழக்குகளையும், குற்றவியல் மாவட்ட நீதிமன்றத்தில் சிறு குற்றங்கள் சார்ந்த வழக்குகளையும் இரண்டாகப் பிரித்து வழக்குகள் நடைபெற்று வருகின்றன. நீதிமன்றத்தில் ஒரு குற்றச் செயல் பொதுமகனால் இழைக்கப்பட்டிருந்தால் அந்தக் குற்றம் செய்த அல்லது குற்றம் சாட்டப்பட்ட நபரை எவ்வாறு கொண்டு வரவேண்டும். அவரின் விசாரணைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படலாம். அதாவது, காவல்துறையின் நடவடிக்கைக்குட்பட்டிருக்கும்போது அவரின் விசாரணைகள் எப்படி நடைபெற்றிருக்க வேண்டும். அதே விடயம் நீதிமன்றத்திற்கு காவல்துறை ஊடாக பாரப்படுத்தும்போது எவ்வாறான நடவடிக்கை கூடாக பாரப்படுத்த வேண்டும். நீதிமன்றம் அவரின் பிரச்சினைகளை எவ்வாறு, என்ன ஒழுங்கில் கையாண்டு அதற்கான முடிவுகளைக் கொடுக்க வேண்டும் என்பது பற்றி இந்தக் குற்றவியல் நடவடிக்கைச் சட்டம் ஒழுங்குப்படுத்திச் சொல்கின்றது. இந்தச் சட்டத்தின் படிதான் நீதிமன்றங்களும், காவல்துறையும் தமது நடவடிக்கைகளை குற்றம் சார்ந்த, குற்றம் இழைக்கப்பட்ட ஒரு செயல் தொடர்பான விசாரணைகளை, விளக்கங்களை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இதனுடைய நன்மை என்னவென்றால், இதுவரை காலமும் நாம் சிறிலங்காவினுடைய குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் என்பவற்றின் சில நன்மையான விடயங்களை உள்வாங்கி எமது நடவடிக்கைகளைப் பின்பற்றி வந்தோம். இதனை அனுசரித்தே எமது நீதிமன்றங்கள் இதுவரை செயற்பட்டு வந்தன.

இதற்கு மேலாக குறிப்பிட்ட பகுதியை உள்ளடக்கியதாக மட்டும் எங்களுடைய தமிழீழச் சட்டக் கோவையின் ஒரு பகுதி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அந்தப் பகுதிகளுக்குட்பட்டதாகவும், எமது குற்றவியல் நடவடிக்கை முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. இந்த நிலையில், இப்போது எம்மால் வெளியிடப்பட்ட இந்த குற்றவியல் நடைமுறை எண் சட்டம் வந்ததன் பின்னர் நாம் திடமான சட்ட நடைமுறைக்கு உட்பட்டு இந்த வழக்குகளை அணுகக்கூடிய வகையிலும், அதற்கான சரியான தீர்வை கொடுக்கக் கூடிய வகையிலும் எங்கள் நடவடிக்கைகளைப் பின்பற்ற மிகவும் இலகுவான முறையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கின்றது என்றார்.

- பல்கலைக்கழக அனுமதி முறையில் -

# தேசியக் கல்வி ஆணைக்குழுவின் சிபார்சுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

பல்கலைக்கழகங்களுக்கு 80 சதவீதமான மாணவர்களைத் திறமையின் அடிப்படையிலும், எஞ்சியோரை மாவட்ட அடிப்படையிலும் அனுமதிக்க வேண்டும் என்ற தேசியக் கல்வி ஆணைக் குழுவின் சிபார்சுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தூதுக் குழு நேற்று முன்தினம் கல்வி அமைச்சின் செயலாளர் தாராடி மெல்லைச் சந்தித்து கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

வடக்கு கிழக்கு தழிழ் மொழி மூல மாணவர்களுக்கு ஏனைய மாகாணங்களில் சிங்கள மொழி மூல மாணவர்கள் அனுபவித்து வரும் பௌதீக மற்றும் மனித வளங்கள் வழங்கப்படுவதாக இல்லை; இவ்விஷயத்தில் தமிழ் மொழி மூலக்கல்வி மாணவர்கள் இன்னும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றார்கள். கல்வியில் சம வாய்ப்பு தமிழ்மொழிமூல மாணவர்களுக்குக் கிடைக்கும் வரை, தேசியக்கல்வி ஆணைக்குழுவின் 80சதவீதமான மாணவரை திறமையின் அடிப்படையில் அனுமதிப்பது என்ற சிபார்சை அமுல் நடத்தக் கூடாது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவின் தலைவர் த.மகாசிவம் தாராடிமெல்லைக் கேட்டுக் கொண்டார் .அது போன்று பாடவிதானத்தில் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ள கடல் சார்ந்த தொழில்நுட்பக் கல்விப் பாடத்தை நீக்க வேண்டும் என்ற தேசியக்கல்வி ஆணைக்குழுவின் இன்னொரு சிபார்சையும் ஏற்கக்கூடாது என்றும் மகாசிவம் வலியுறுத்தினார். கடல் சார்ந்ததாகவே வடக்கு கிழக்கு பொருளாதாரம் அமைந்துள்ள நிலையில் அப்பாடத்தை நீக்கும்படி கோருவது அர்த்த மற்றது என்று மாகசிவம் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சின் செயலாளர் தாராடிமெல்,தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபார்சுகள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாக அரசாங்கம் ஏற்காது என்றும் தேசியக் கல்வி ஆணைக் குழுவின் சிபார்சுகளை அரசு பரிசீலனை செய்யும் கட்டம் வரும்போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கருத்துக்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்

# உள்ளூராட்சிச் சபைகளுக்கு தெரிவாவோரில் 33 வீதத்தினர் பெண்களாக இருத்தல் வேண்டும்

## - சிறிலங்கா அரசாங்கம் தீர்மானம்

உள்ளூராட்சிச் சபைகளிற்குத் தெரிவாவோரில் மூன்றிலொரு பகுதியினர் பெண்களாக இருக்க வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நேற்று முன்தினம் தெரிவித்தார். சிறிலங்காவில் பெண்களின் சனத் தொகை வீதம் 51 வீதமாக உள்ளபோதும், இரண்டு வீத பெண்களே பாராளுமன்றத்திலோ, உள்ளூராட்சிச் சபைகளிலோ பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் எனவும் செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுபான்மையினருக்கு சிறி.ஆட்சியாளர் தீங்கு எதுவும் நினைத்ததில்லை

## – இந்தியத்தூதரிடம் மல்வத்த பீடாதிபதி தெரிவிப்பு

மல்வத்த பீடாதிபதி அதிவண.திடித்துவேவஸ்ரீசித்தார்த்த சுமங்கல தேரரை கண்டி மகாவிகாரையில் சந்தித்து உரையாடிய இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமாராவோ தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்தும் விரிவாக உரையாடியதாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் அமைந்திருந்த பௌத்த விகாரைகள் அனைத்தையும் அதே இடங்களில் மீண்டும் கட்டியெழுப்பவும், பௌத்த விகாரைகள் புதிதாகத் தேவை என்று கோரப்படும் பகுதிகளில் புதிய விகாரைகளைக் கட்டியெழுப்பவும் இந்திய அரசு தனது உதவிகளையும் அழுத்தங்களையும் வழங்க முன்வரவேண்டும் என்று பீடாதிபதி உயர்ஸ்தானிகரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிறிலங்காவில் ஆட்சியிலிருந்த எந்தவொரு அரசும் அல்லது கட்சியும் சிறுபான்மையினத்திற்கு எவ்வித தீங்கும் நினைக்கவுமில்லை, இழைக்கவுமில்லை என்று தெரிவித்த மல்வத்த பீடாதிபதி புத்த தர்மத்தின்படி சமாதானத்தை விரும்பும் மக்களாகவே பௌத்தர்கள் வாழ்ந்து வந்துள்ளதாகவும், தொடர்ந்தும் அனைத்து மக்களுடனும் சமாதானமாக வாழவே தாம் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவர இந்திய அரசு தனது பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும் என்றும் பீடாதிபதி இச்சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக்கொண்டார். 21 வருடங்களுக்கு முன்னர் சிறிலங்காவுக்கு தான் வந்தபோது நாடு எவ்வளவு அமைதியாக இருந்தது என்பதை நினைவுகூர்ந்த நிருபமா ராவோ, அன்று தான் அவதானித்தது போன்றே இந்நாட்டு மக்கள் புத்த தர்மத்தை மிகச் சீராகக் கடைப்பிடித்து சமாதானத்துடன் வாழவே மக்கள் விருப்புவதைத் தான் அவதானித்ததாகவும், தற்போது இனப்பிரச்சினையால் பாதிப்படைந்துள்ள நாட்டை மீண்டும் சீரமைக்க இந்தியா தன்னாலான பங்களிப்பை வழங்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

# துணுக்காய் பாண்டியன் குளப்பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அன்றைய தினம் பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட 65 முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. முன்னதாக ஆசிரியர்கள் மல்லாவியிலுள்ள பாண்டியன் குளம் துணுக்காய் அபிவிருத்தி கழக மண்டபத்திலிருந்து மலர் மாலை அணிவித்து பாண்ட்வாத்திய இசை முழங்க,தமிழர் புனர்வாழ்வுக் கழக மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர் அங்கு தமிழர் புனர்வாழ்வுக், கழகத்தின் தலைவர் க.குமாரசாமி தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை துணுக்காய் கல்விக் கழகப் பொறுப்பாளர் கு.வாதவூரான், துணுக்காய்ப் பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வே.மயூரன், பாண்டியன்குளம் முன்பள்ளிகளின் தலைவர் ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினைத் துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் ஏற்றியதைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக்கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழக வலயப் பொறுப்பாளர். மூர்த்தி ஏற்றி வைத்தார். வரவேற்புரையை துணுக்காய்ப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வி கிருபாஜினி நிகழ்த்தினார். ஆசியுரையை முன்பள்ளி உதவி கல்விப் பணிப்பாளர் நிகழ்த்த,கருத்துரைகளை துணுக்காய்ப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் நா.நந்தகுமார், துணுக்காய் கல்விக் கழகப் பொறுப்பாளர் , பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் செ.புனிதன், துணுக்காய் ப.நோ.கூ.ச பொதுமுகாமையாளர் ஜெகநாதன் ஆகியோர் வழங்கினர். சிறப்புரையை தமிழர் புனர்வழ்வுக்கழக வலயப் பொறுப்பாளர் மூர்த்தி வழங்கினார் - தொடர்ந்து ஆசிரியர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன, ஆசிரியர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது, இதில் அரச , அரச சார்பற்ற பிரதிநிதிகள் பொது அமைப்புப் பிரதிநிதிகள் போராளிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொன்டனர். (24)

## உந்துருளி திருட்டு

மன்னார் விளையாட்டரங்கில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வின் போது -புதிய பொக்ஸர் ரக உந்துருளியும், பெண்கள் பாவிக்கும் ஈருருளியும் களவாடப்பட்டுள் ளன. இதேவேளை மன்னாரில்- ஒரு வீட்டில் கூரை வழியாக இறங்கி களவாட முயன்றவர் வீட்டுக்காரர் கண்டதும் அவர் ஓடிவிட்டார். (மி)

## யாப்பு மாற்றத்திற்கு ஆதரவு

தற்போதைய அரசியல் யாப்பு முறையை மாற்றி சனாதிபதி அதிகாரங்களை மாற்றுவது மிக அவசியமென சனாதிபதி தெரிவித்த கருத்தைத் தாம் வரவேற்பதாகவும், இந்த யாப்பு மாற்றத்திற்கு எமது கட்சி முழு ஆதரவையும் வழங்கும் எனவும் கண்டி மாவட்ட ஜாதிகஹெல உறுமய கட்சிபாராளுமன்ற அங்கத்தவர் உடவத்த நந்தனதேரர் கூறியுள்ளார்.

## விலை அதிகரிக்க இடமுண்டு

(கொழும்பு)

நாட்டில் எண்ணெய் விலை ஏற்றம் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கும் பொறுப்பு சிறிலங்கா மத்திய வங்கிக்கும், இந்திய எண்ணெய் கம்பனிக்கும் உள்ளதென்று பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் எண்ணெய் விலை ஏற்றம் சம்பந்தமாக பொது மக்களுக்கு அறிவிக்கும் அதிகாரம் தமக்குக் கிடையாது என்று அந்த உத்தியோகத்தர் கூறியுள்ளார். மேலும் மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிக்க இடமுண்டு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வரவு செலவுத்திட்டம் 18 ஆம் திகதி சமர்ப்பிப்பு

2005 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இம்மாதம் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என திறைசேரிச் செயலர் தெரிவித்துள்ளார். சகல அமைச்சுகளுக்கும் ஒதுக்கப்படும் நிதி சம்பந்தப்பட்ட வேலைகள் தற்பொழுது துரிதகதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது எனவும் தற்பொழுது அமைச்சுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுக்கு அங்கீகாரம் கிடைத்தபின் பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் எனவும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாட்டு கடன் வாங்குவது அதிகமாகக் குறைக்கப்பட்டுள்ளதென்றும் மத்திய திறைசேரி செயலாளர் நாயகம் பேராசிரியர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கூட்டுறவு சம்பந்தமான கருத்தரங்கில் ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்ட நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி 12.30 மணியளவில் பாடசாலை மாணவன் சி.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு கூட்டுறவு செயலாளர் க.சிவகுமார் கிளிநொச்சியில் இருந்து வருகை தந்து பாடசாலை மாணவர்களுக்கு கூட்டுறவு சம்பந்தமான பல கருத்துக்களையும், மாணவர்கள் பாடசாலையில் ஒன்றிணைந்து நூல்நிலையம், சிற்றுண்டிச்சாலை என்பன அமைத்து ஒரு வங்கி போல செயற்படுவதற்கான பல முக்கிய கருத்துக்களையும் வழங்கினார். இந்நிகழ்விற்கு பலதரப்பட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டமையும், நன்றி உரையினைப் பாடசாலை உயர்தர மாணவி கு.குவேதினி அவர்கள் நிகழ்த்தினார். (12)


நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சு

வடக்கு கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமாக உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டம்.

வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் [நியாப்] கட்டம் - II

# சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் பதவி வெற்றிடம் (13)

வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் கட்டம் - II உலக வங்கியின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டம் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் இம் மாகாணத்திற்கு அண்டிய மாவட்டங்களான அனுராதபுரம், பொலநறுவை, மொனறாகலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் 2005-2010ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்படவுள்ளது.

நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சினாலும், வடகிழக்கு மாகாண சபையினாலும் கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளையும் அனுபவங்களையும் பெற்றவர்களிடமிருந்து சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் பதவிக்கு கிளிநொச்சி மாவட்டத்திற்கென 13 பேர் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இப்பதவிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்கவேண்டும்.

**01.பொது விதிகள :-**

பதவி தற்காலிகமானது முதலில் ஒரு வருடத்திற்கு நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். பின் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்பவும், முதல் வருட சேவைகாலத்தில் திருப்திகரமாக சேவை ஆற்றியிருப்பினும் தொடர்ந்தும் சேவை நீடிப்பு வழங்கப்படும்.

**02.வயதெல்லை-** விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இவ் வயதெல்லையிலிருந்து அரச சேவையில் உள்ளவர்கள், கூட்டுத்தாபனங்களில் கடமை புரிபவர்கள் ஆகியோர் விதிவிலக்குப் பெறுவர்.

**03.சம்பளம்-**இந்நியமனம் முதலில் 3 மாத காலத்திற்கு பயிற்சி அடிப்படையிலும், அதன் பின்பு ஒப்பந்த அடிப்படையிலும் வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் ரூபா 6,000 (சகலபடிகளும் உட்பட) பயிற்சிக்காலப் படியாக வழங்கப்படும். பயிற்சிகள் முதலாவது மாதத்தில் திருகோணமலையிலும் அதன் பின்பு அந்தந்த மாவட்ட நியாப் காரியாலயத்திலும் வழங்கப்படும்.

**3.1 பட்டதாரிகளுக்கு :-**

புதிய பட்டதாரிகளுக்கு மாதாந்தச் சம்பளம் ரூ9,375 உடன் இடைக்காலப்படியாக ரூ 2,200/= வும் வழங்கப்படும். ஏனையோருக்கு முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் இல-10இன் பிரகாரம் சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

**3.2.டிப்ளோமா தகைமையுள்ளவர்களுக்கு**

நேரடியாக வேலையில் இணைவோருக்கு மாதாந்தச் சம்பளமாக ரூ5,570 உடன் இடைக்காலப் படியாக ரூ2,200உம் வழங்கப்படும். ஏனையோருக்கு முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 10இன் பிரகாரம் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**3.3.க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு :-**

நேரடியாக நியமனம் பெறுவோருக்கு மாதாந்தச் சம்பளமாக ரூ.5,240 உடன் இடைக்காலப்படியாக ரூ.2,200உம் வழங்கப்படும். ஏனையோருக்கு முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 10 இன் பிரகாரம் பேசித்தீர்க்கப்படும்.

**04.கொடுப்பனவு :-**

4.1.சம்பளம் மாதாந்தம் வழங்கப்படும் ஏனைய படிகள் அவர்களது வேலைதிறனின் அடிப்படையிலேயே வழங்கப்படும்.

4.2.அரச சேவையில் இருந்து விடுப்புப்பெற்று இச்சேவைக்கு வருவோர் அல்லது ஓய்வுபெற்றவர்களுக்கான சம்பளங்கள் அவர்களது இறுதிச் சம்பளத் தொகைக்கேற்ப பேசித்தீர்மானிக்கப்படும். இடைக்காலப்படிகள் வேலைத்திறனின் அடிப்படையில் வழங்கப்படும்.

**05. விண்ணப்பதாரி :-**

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் 2. திட்டம் நடைபெறும் இடத்தில் சேவையாற்றக்கூடிய சுக, தேக ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். 3. குறிப்பிட்ட இலக்குக் கிராமத்தில் வசித்தல்.

**06. விண்ணப்பிக்கும் முறை :-**

தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது கல்வித் தகைமைகள், தொழில்தகைமை, முன்னைய வேலை அனுபவங்கள் ஆகியவற்றுடன் தமது சுய விபரத்தினையும் விரும்பும் மாவட்டத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலம் அரசாங்க அதிபர் கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 30.10.2004ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தினை தமது திணைக்களத்தலைவர்/செயலாளர் ஊடக அனுப்புதல் வேண்டும். இப்பதவிக்கு பெண்களும் விண்ணப்பிக்கலாம்.

**07.தெரிவு :-**

பொருத்தமானவர்கள் மாவட்ட அடிப்படையில் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள். இதில் 50வீதம் பெண்கள் தெரிவுசெய்யப்படுவர்.

**08. கடமைகளும், பொறுப்புக்களும் :-**

★மையக்கிராமங்களிலுள்ள மக்களுக்கும் பிரதேச செயலாளர் மட்ட உத்தியோகத்தர்களுக்கும் இடையே திட்டம் சம்பந்தமான விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களிடையே நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்தல்.

★மையக்கிராமங்களுக்கான சமூக பொருளாதார நிலைமை சம்பந்தமான அறிக்கையினையும், கிராம அபிவிருத்தித்திட்டத்தினையும் தயாரித்தல்.

★திட்டத்தின் சிவில்சார் கூறுகளைத் திட்டமிட்டு அமுலாக்கி இணைப்பாக்குதல்.

★மையக்கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படும் ஜீவனோபாய ஆதாரத்திட்டம், சிறு குழுக்கள் அமைத்தல், சிறுகுழு சேமிப்பு, நுண்கடன் பராமரிப்பு, பதிவேடுகள் பேணுதல் போன்ற விடயங்களினைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி இணைப்பாக்குதல்.

★கிராம மட்ட அமைப்புக்களின் நிறுவனக் கட்டமைப்பு விருத்திக்கு உதவுதல்.

★மையக்கிராமங்களில் பயிற்சிகள் நடத்துவதும் பயிற்சிகளை ஒழுங்குபடுத்துவதும்,

★திட்ட முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல்.

**9. கல்வித்தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :-**

9.1 சமூக விஞ்ஞானம், சமூகவியல், விவசாயம், புவியியல், பொருளியல், வர்த்தகம், வணிகமும் முகாமைத்துவமும் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக பட்டத்தைப் பெற்றிருப்பதுடன் சமூக உணர்வூட்டடல் அல்லது அது தொடர்பான விடயத்தில் மூன்று (3) வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

9.2.விவசாயம், சமூகவிஞ்ஞானம், வர்த்தக அபிவிருத்தி ஆகிய துறைகளில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும்.அத்துடன் சமூக உணர்வூட்டல் அல்லது அதனுடன் தொடர்புபட்ட துறைகளில் ஐந்து (5) வருடசேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

9.3. க.பொ.த. உயர்தர பரீட்சையில் புவியியல், கணக்கீடு, வர்த்தகம், பொருளியல், வணிகக்கல்வி ஆகியபாடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் எட்டு (8) வருடங்கள் சமூக உணர்வூட்டல் அல்லது அதனுடன் தொடர்புபட்ட துறைகளில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

9.4. ஆங்கிலத்தில் நல்ல புலமையும், தமிழ் மொழியில் சமூகத்தவருடன் கருத்துக்களைப் பரிமாறும் ஆற்றலும் இருப்பின் விசேட தகைமைகளாகக்கொள்ளப்படும்.

தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கச்சேரி,
கிளிநொச்சி.

(சி-10268)

# அரசியல் வாதிகளின் கைகளில் நாடுஇருப்பினும் 2020இல் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றவேண்டும்

## இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம்


(புதுடில்லி)

**தகவல் தொழில்நுட்பம், உயர் தொழில்நுட்பம், விண்வெளி ஆராய்ச்சி, பாதுகாப்பு ஆராய்ச்சி என்பவற்றில் இந்தியா தனக்கென்று தனிப் பெயரைப் பெற்றுள்ளது எனறு இந்திய குடியரசுத் தலைவர்.அப்துல் கலாம் நேற்றுக் கூறியுள்ளார்.**

இருந்த போதும் அடிப்படை ஆராய்ச்சிப் பணிகளை துரிதப் படுத்தப்போதுமான நிதியுதவிகள் தேவை என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாடு அரசியல் வாதிகளின் கைகளில் இருந்தபோதும், 2020இல் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றவேண்டும் எனும் நோக்கத்தோடு தாம் செயற்படுவதால் அதனை எட்டுவதற்கு பாராளுமன்றத்தையும், அரசையும் தாம் ஈர்க்க முடியும் என்று கூறியுள்ளார்.

நேற்றையதினம் 74 ஆவது பிறந்தநாளையொட்டி அப்துல் கலாம் இவ்வாறு கூறியுள்ளார்.



இடிதாக்கியதில் படுகாயம் அடைந்த 2மாணவிகளுக்கு உடுமலை அரச மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. உடுமலை அருகே மடத்துக்குளம் அரசு மேல்நிலை பள்ளிக் கூடத்தின்மீது .நேற்றுமுன்தினம் இடி விழுந்தது. இதில் ஒரு மாணவனும்,ஒரு மாணவியும் சம்பவ இடத்திலேயே இறந்து போனார்கள். ஆசிரியை உட்பட 16 மாணவ-மாணவிகள் படுகாயம் அடைந்தனர்.

# போடோ தீவிரவாதிகள் நேற்று முதல் போர் நிறுத்தம்!

அசாம் மாநிலத்தில் நேற்றுத் தொடக்கம் ஆறு மாதகாலம் சண்டை நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாகப் போடோ தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். சிவகாசியில் அசாம் முதலமைச்சர் கருண்கோகே நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில்,

இது தொடர்பாக போடோ தீவிரவாதிகளின் தலைவர் நேகலா கையெழுத்திட்ட கடிதத்தைத் தமக்குத் தூதர்மூலம் அனுப்பியுள்ளதாகக் கூறியுள்ளார். தாம் விடுத்த வேண்டுகோளையடுத்துத் தீவிரவாதிகள் போர் நிறுத்தத்தை அறிவித்திருப்பது மத்தியரசுடன் சமரசப்பேச்சு நடத்துவதற்கான நல்ல அறிகுறி என்றும் அவர் கூறியுள்ளார்.

# அதிரடிப்படையால் வீரப்பனைப் பிடிக்க முடியாது சரணடையச் செய்வது தான் ஒரேவழி

## - கர்நாடக முன்னாள் பொலிஸ் அதிகாரி கருத்து

அதிரடிப்படை பொலிசாரால் வீரப்பனைப் பிடிக்க முடியாது. அவரைக் சரணடையச் செய்வது தான் அதற்கு ஒரே வழி என்று பா.ஜ எம்.பி. சாங்கிலியானா கூறினார். கர்நாடாகப் பொலிஸ் ஜி.டி.பி யாகப் பணியாற்றியவர் சாங்கிலியானா வீரப்பனைத் தேடும் பணியிலும் ஈடுபட்டவர். கடந்த லோக்சபா தேர்தலில் பா.ஜ சார்பில் பெங்களூரில் வெற்றி பெற்று எம்.பி ஆனார்.

நிருபர்களிடம் அவர் கூறியதாவது; தமிழக கர்நாடக எல்லையில் வீரப்பன் நடமாடும் அடர்ந்த வனப்பகுதி 22 ஆயிரம் சதுரம் கி.மீ பரப்பளவில் உள்ளது. அங்கு உயர்ந்த மரங்களும், முற்புதர்களும், கொடி விலங்குகளும் அதிகம். அங்கு தேடுதல் வேட்டை நடத்துவதும் நமது பொலிசாருக்கு எளிதல்ல. வீரப்பனைப் பிடிப்பதும் எளிதான காரியம் அல்ல. உயரமான பகுதியில் இருந்து வனப்பகுதியில் மனிதர்கள், விலங்குகளின் நடமாட்டத்தை கண்காணிக்கும் நவீன தொழில்நுட்பம் உள்ளது. உயிரினங்களின் உடல்வெப்பத்தை சென்சார் மூலம் அறிந்து அவற்றின் நடமாட்டத்தை இதன் மூலம் கண்டறியலாம். வனப்பகுதியில் விலங்குகளும், பலரது நடமாட்டமும் இருப்பதால் அந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வீரப்பனை பிடிப்பது கடினம். அதற்கும் மிகுந்த செலவாகும்.

வீரப்பன் சரணடைய சனாதிபதி, பிரதமர் போன்ற உயர் பதவியில் இருப்பவர்கள் வேண்டுகோள் விடுக்கலாம். அதை ஏற்று சரணடைய முன்வந்தால் நிபந்தனைகளுடன் ஏற்கலாம். இதுதான் வீரப்பனைப் பிடிக்கச் சிறந்தவழி இவ்வாறு சாங்கிலியானா கூறினார்.

# ஆந்திராவில் தீவிரவாத அமைப்புகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நேற்று ஆரம்பம்

(ஹைதராபாத்)

ஆந்திரா மாநில அரசுக்கும் நக்ஸலைட் தீவிரவாத அமைப்புக்களுக்குமான பேச்சுவார்த்தைகள் நேற்று ஹைதராபாத்தில் ஆரம்பமாகின.

அரசு சார்பில் உள்துறை அமைச்சர் சென்னாரெட்டி, நகராய்ச்சி நிர்வாக அமைச்சர் ஆகியோர் அடங்கலாக மூவரும், நக்ஸலைட் அமைப்புக்களான சி.பி.ஐ. மாவோஸ் சார்பில் அதன் மாநில செயலர் இராமகிருஸ்ணா, சி.பி.ஐ.மார்ச்சிஸ் லெலனிஸ்ட் சார்பில் அதன் மாநில செயலர் உள்ளிட்ட 28 உறுப்பினர்கள் குழுவும் நேற்றுப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன.

குண்டுவெடிப்பு உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களில் ஈடுபட்டு வந்த நக்ஸலைட் அமைப்புகள் மீதான தடையை நீக்கிய புதிய முதலமைச்சர் அவ் அமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார் என்பதனால் அமைதி திரும்பும் என்று மக்கள் நம்புகின்றனர்.


## தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை-2004

## மாதிரி வினாத்தாள்கள்

**திரு.வே.அன்பழகன் ஆசிரியர் அவர்களின் மாதிரி வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், தனிப்பட்டோர் உங்கள் விண்ணப்பங்களைப் பெற்றுப் பதிவுகளை முன் கூட்டியே செய்து கொள்ளுங்கள். முதலாவது மாதிரிப் பரீட்சை**

**17.10.2004 ஞாயிற்றுக்கிழமை**

*தீபாவளி வாழ்த்துக்கள் மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.*

**வன்னியில்**

**பிள்ளையார் பொத்தகசாலை,**
**கிளிநொச்சி.**
T.P. 021 228 5750

(சி-10577)


## கதவடைப்பு

மணிப்பூர் மாநிலத்தை இந்தியாவின் ஒரு பகுதியாக சுதந்திரத்திற்குப் பின்னர் இணைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுதல் அம் மாநிலத்தில் மணிப்பூர் மக்கள் இயக்கம் முழு அடைப்புப் போராட்டம் நடத்தி வரு கின்றது. இதனால் அம் மாநிலம் ஸ்தம்பித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

## பணவீக்கம் வீழ்ச்சி

(புதுடில்லி)

இந்தியாவின் ஆண்டு பணவீக்கம் 7.2 வீதமாக குறைவடைந்துள்ளதாக மத்தியரசு கூறியுள்ளது. எரிபொருட்கள் உள்ளிட்ட உற்பத்திப் பொருட்களின் விலை குறைந்தமையே பணவீக்கம் குறையக் காரணம் என்று கூறப்படுகின்றது.

முன்பு 7.38 ஆக இருந்து 0.18 வீதம் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## அறிவித்தல்

மர மீள்நடுகை மேற்கொள்ள விரும்பும் நிறுவனங்கள், பொதுமக்கள் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். தேவையான மரக்கன்றுகள் பெற்றுத் தர ஒழுங்குகள் செய்து தரப்படும்.

**பொன். நித்தியானந்தம்,**
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி-10576)

## பெண் பராமரிப்பாளர் தேவை

வவுனியா கோவில்குளம் சிவாலய ஆதரவில் இயங்கிவரும் ஆதரவு அற்ற குழந்தைகள் காப்பகத்திற்குக் குழந்தைகளை அரவணைத்துப் பராமரிக்கக் கூடிய பராமரிப்பாளர் தேவை.

| | | |
|---|---|---|
| வயது எல்லை | :– | 25 – 35 |
| கல்வித் தகைமை | :– | க.பொ.த. (சா/தரமும்அதற்கு மேற்பட்டதும்) |

**தொண்டு மனப்பான்மை உள்ளவர்கள் விரும்பத்தக்கது.**
**(ஊதியம் வழங்கப்படும்)**

விண்ணப்பங்களை 30-10-2004 இற்கு முன் அனுப்பி வைக்கவும்

*செயலாளர்,*
*ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்,*
*கோவில்குளம்,*
*வவுனியா.*

## க.வ.ப.நோ.கூ.சங்கம், பரந்தன்
### பதிவு இல. பி.ஏ. 047 பரந்தன் - திகதி 1971-02-10

## வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்

சங்கத்தின் உறுப்பினர்களிடையே இருந்து கிளைக்குழுக்களைத் தெரிவு செய்து, பொதுச் சபை அமைத்துப் புதிய நெறியாளர் குழுவைத் தெரிவு செய்வதற்காக வாக்காளர் பட்டியல் 2004-10-17 தொடக்கம் 2004-10-25 வரை கிளை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. காட்சிப்படுத்திய அட்டவணையில், உறுப்பினர் பெயர் அல்லது வேறு ஏதாவது திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருப்பின் அவை பற்றிய ஆட்சேபனைகளை 2004-10-25இற்கு முன்னர் "செயலாளர், கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன்" என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அறிவித்தல் வேண்டும்.

குறிப்பு : உமையாள்புரம், ஆனையிறவு ஆகிய கிளைகளின் பட்டியல் பரந்தன் கிளையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.


**செயலாளர்,**
**க.வ.ப.நோ.கூ.சங்கம்,**
**பரந்தன்.**

(சி-10270)

# கஜ்ப்ரோவிச்சின் பெருந் தன்மை!

(சென்னை)

நேற்று முன்தினம் இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் சென்னையில் நடைபெறும் 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தின் போது நடுவரால் ஆட்டமிழப்புத் தீர்ப்பு வழங்கும் முன்பே ஆடுகளத்தை




விட்டு வெளியேறி நேர்மையாகவும், வீரர்களுக்கு முன்மாதிரியாகவும் நடந்து கொண்டார். அவுஸ்திரேலிய வீரர் கஜ்ப்ரோவிட்ச். அவர் கும்ளே வீசிய பந்தை அடிக்க முயன்ற போது விளிம்பில் பட்டு லட்சுமனிடம் பிடியாக மாறியது.எனினும் இதனை நடுவர் அவதானிக்காது இருந்த போது இந்திய வீரர்கள் ஆட்டமிழப்பு கேட்டனர். பின்னரும் நடுவர் எதுவித சலனமுமின்றி இருந்தார். ஆனால் கஜ்ப்ரோட்விச் தானாகவே வெளியேறினார்.

# சென்னை டெஸ்ட், இந்தியா முதல் இனிங்சில் அவுஸைவிட 56 ஓட்டங்கள் முன்னிலையில்



(சென்னை)

இந்திய-அவுஸ். அணிகளுக்கு இடையே சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவின் போது முதலாவது இனிங்சில், இந்திய அணி அவுஸ். அணியின் முதல் இனிங்சில் ஓட்ட எண்ணிக்கையை விட 56 ஓட்டங்கள் முன்னணியில் உள்ளது.



நேற்றுக் காலை 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் என்ற நிலையில் ஆட்டத்தைத்தொடங்கிய இந்திய அணி நேற்றைய ஆட்டமுடிவின்போது 291/6என்ற நிலையில் இருந்தது.

இந்தியஅணியின் ஆரம்பத் துடுப்பாட்டவீரரான சேவாக் 155 ஓட்டங்களைப் பெற்றார் ஏனைய இந்தியத்துடுப்பாட்ட வீரர்களான ராவிட், கங்குலி, லக்ஷ்மன் ஆகியோர் சோபிக்கத்தவறினர். ஆட்டநேர இறுதியில், கயூப், பட்டேல் ஆகியோர் களத்தில் இருந்தனர் இவர்கள் ஏராளமான விக்கெட் இணைப்பாட்டமாக 50 இற்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை பந்து வீச்சில் ஷேன் வோர்ன்,மூன்று விக்கெட்டுக்களையும் கிலெஸ்பி இரண்டு விக்கெட்டுக்களைப் பெற்றனர்.



# கும்ளேயின் பந்துவீச்சில் ஏமாந்தோம்

## கில்கிறிஸ்ட்



235 ஓட்டங்களில் தமது அணியைக் கட்டுப்படுத்தக் காரணமாகவிருந்த அனில் கும்ளேயின் பந்துவீச்சு அபாரமாக விருந்ததாக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் கில்கிறிஸ்ட் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த போட்டியில் சொகைப்அத்தரின் பந்துவீச்சுப் போன்றும், வாகாவில் நடைபெற்ற போட்டியில் அம்புரோயின் (மேற்கிந்தியத்தீவு) பந்துவீச்சுப் போன்றும் கும்ளேயின் பந்துவீச்சு இருந்ததாக அவர் தெரிவித்தார்.

இதனால் எமக்கு இனிவரும் போட்டிகளில் அச்சம் ஏற்படவில்லை. நாம் நிலைமையை உணர்ந்து செயற்படுவோம். எமது அணிவீரர் நடுவர் தீர்ப்பு வழங்காமலேயே வெளியில் சென்றமை தனிப்பட்ட முடிவு என்று தெரிவித்த அவர். அணி நிர்வாகம் இதில் தலையிடமாட்டாது என்றும் கூறியுள்ளார்.

# கெய்த் மில்லருக்கு அரச மரியாதை

உலகப் புகழ்பெற்ற அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் கெய்த் மில்லரின் பூதவுடலுக்கு எதிர்வரும் புதனன்று மெல்போர்னில் அரச மரியாதையுடன் இறுதிக்கிரியை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 84 வயதான மில்லர் கடந்த திங்களன்று காலமானது தெரிந்ததே.

## பாக்டெல் முக்கோணத்தொடர்

# பாகிஸ்தான் – சிறிலங்கா அணிகள் இறுதிப் போட்டியில் இன்று மோதுகின்றன!

(கராய்ச்சி)

பாக்டெல் கிண்ணத்துக்கான ஒரு நாள் முக்கோண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றாகும். இப் போட்டியில் பாகிஸ்தான்-சிறிலங்கா அணிகள் மோதவுள்ளன.

இத்தொடரில் இது வரையில் நான்கு போட்டிகளில் விளையாடிய பாகிஸ்தான் அணி அந்த நான்கு போட்டிகளிலும் வெற்றியீட்டி நல்ல மனோநிலையில் உள்ளது. அத்தோடு பாகிஸ்தானில் இத் தொடர் நடைபெறவுள்ளதால் அதன் வாய்ப்பும் பிரகாசமானதாகவுள்ளது.

இதேவேளை சிறிலங்கா அணி நான்கு போட்டிகளில் மூன்றில் விளையாடி ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. சிம்பாப்வேயுடனான ஒரு போட்டி மழையினால் கைவிடப்பட்டது.

இந் நிலையில் இன்று நடக்கவிருக்கும் "பாக்டெல்" இறுதிப் போட்டி சிறிலங்கா அணிக்குச் சவால் நிறைந்ததாகவே இருக்கும் என கருதப்படுகிறது. ஆயினும் சிறிலங்கா அணியிலும் ஜெயசூரிய, சமிந்தவாஸ் போன்றவர்கள் இடம்பெற்றுள்ளதால் போட்டியின் முடிவு குறித்து தற்பொழுது எதுவும் கூறிவிட முடியாது.

# இருபெரும் போட்டிகளில் சதமடித்த வீரருக்கு பாகிஸ்தான் தொடரில் இடமில்லை

எதிர்வரும் 20 ஆம் திகதி பைசலாபாத்தில் ஆரம்பமாகும் பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் சிறிலங்கா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வணியில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கெதிராக டெஸ்ட்சதம் அடித்த திலகரத்தின தில்ஷான் நீக்கப்பட்டுள்ளார். மேலும் 15 பேர் அடங்கிய அணியில் அவிஷ்க குணவர்தன, சமன் ஜயந்த, நுவன்சொய்சா, கௌசல்லொக்கு ஆராச்சி ஆகியோரும் அடங்கவில்லை. அவர்களுக்குப் பதிலாக றொமேஷ்களுவிதாரண, திலான் சமரவீர, ஜெகான்முபாரக், இயன் டானியல், லசித மாலிங்க ஆகியோர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# இங். அணித்தலைவராக மீண்டும் டேவிட் பெக்காம்!

(லண்டன்)

இங்கிலாந்து கால்பந்தாட்ட அணிக்கு டேவிட் பெக்காம் மீண்டும் தலைமைப் பொறுப்பை ஏற்கவிருக்கிறார்.

முன்னர் அவரது நடத்தையில் தவறு இருப்பதாகக் கூறிய கால்பந்தாட்ட சங்கம் அவரை அணித் தலைமை பதவியிலிருந்து நீக்கியது.

ஆயினும் அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டு அவரை மீண்டும் அணித்தலைவராக நியமிக்க இக்கால்பந்தாட்ட சங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது.

பெக்காமின் அணி உலகக் கிண்ண தகுதிப் போட்டியில் வேல்ஸ் அணியையும்,அஸர்பைஜன் அணியையும் வென்று முன்னணி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# முரளியின் உலக சாதனையை முறியடித்தார் ஷேன் வோர்ன்



அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் சிறிலங்காவின் முத்தையா முரளிதரனின் 532 விக்கெட்டுக்களைக் கடந்து உலகில் அதிகூடிய டெஸ்ட் விக்கெட்டைப் பெற்ற வீரரானார். இவர் தனது அணிக்கும் இந்தியாவுக்குமிடையில் சென்னையில் நடைபெறும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் 2ஆம் நாள் இர்பான் பதானின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் இச்சாதனையை எட்டினார்.

1992 ஆம் ஆண்டு இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியின் மூலம் முதன் முதல் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பிரவேசித்த ஷேன் வோர்ன் அதே அணிக்கு எதிராகத் தனது 114 ஆவது டெஸ்ட் போட்டியில் 533 விக்கெட்டுக்களைப் பெற்று உலக சாதனையைப் புரிந்துள்ளார்.

இதேவேளை இவர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதன் முதலாக 500 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதலாவது சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையைக் கடந்த மார்ச் மாதம் ஏற்படுத்தியிருந்தார்.

அவர் தனது 500 ஆவது விக்கெட்டை இலங்கை அணிக்கு எதிராகக் காலியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கை அணித்தலைவர் ஹசான்திலகரட்ணவின் விக்கெட்டைப் பெற்றதன் மூலம் பெற்றார்.

25.6 என்ற பந்துவீச்சு சராசரியில் 13652 ஓட்டங்களைக் கொடுத்து ஷேன்வோர்ன் 533 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இவர் 27 தடவைகள் ஐந்திற்கும் அதிகமான டெஸ்ட் விக்கெட்டுக்களைப் பெற்ற அதே வேளை, மிகச்சிறந்த பந்துவீச்சாக 71 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து எட்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# சச்சின் டெண்டுல்கர் மும்மை திரும்பினார்

மூன்றாவது டெஸ்ட் போட்டியிலாவது ஆடுவாரா என ரசிகர்கள் எதிர்பார்த்திருக்கும் நிலையில் இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்று காயத்துக்கு சிகிச்சை பெற மும்பை சென்றார். கடந்த சில நாட்களாக சக வீரர்களுடன் தங்கியிருந்த அவர் மும்பை செல்வதாக இந்திய கிரிக்கட் சபை செயலர் நாயர் தெரிவித்துள்ளார்.

# மும்பையில் டெஸ்ட் போட்டி வேண்டாம் பாகிஸ்தான் ஆய்வுக்குழு அறிவிப்பு

இந்தியத் தொடரின்போது மும்பையில் டெஸ்ட் போட்டியை நடத்த வேண்டாம் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டுள்ளது. இந்திய அணி 15 ஆண்டுகளுக்குப் பிறகு 2003 மார்ச்சில் பாகிஸ்தான் சென்று ஒரு முழு அளவிலான தொடரில் பங்கேற்றது. இதில் டெஸ்ட், ஒரு நாள் தொடரை இந்திய அணி வென்று சாதித்தது. இந்தப் பயணத்திற்கு முன்பாகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து உள்துறை அமைச்சகத்தின் பொலிஸ் அதிகாரி யஷோவர்தன் ஆசாத் தலைமையிலான குழு பாகிஸ்தான் சென்று ஆய்வு நடாத்தியது. இக்குழுவினர் போட்டி நடக்கும் மைதானங்கள், வீரர்கள் தங்கும் இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்து திருப்தி தெரிவித்தனர்.

# கடினம்தான்... முடியாததல்ல– கவாஸ்கர்




டெஸ்ட் தொடரை வெற்றியுடன் தொடங்கி விட்டது அவுஸ்திரேலியா. இனி கூடுதல் தன்னம்பிக்கையுடன் அவர்கள் களமிறங்குவார்கள். டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவது கடினமான விஷயம்தான்... ஆனால் முடியாத காரியம் அல்ல. கடந்த காலங்களில் இந்திய அணி சாதித்துக் காட்டியிருக்கிறது.

பெங்களூர் டெஸ்டைப் பார்த்தபோது நமது துடுப்பாட்டவீரர்கள் தங்களை நிறைய மாற்றிக்கொள்ளவேண்டும் என்பது தெரிந்தது. இது டெஸ்ட்போட்டி பந்து வீச்சாளர்கள் தங்கள் தனித்திறமையைக் காட்டும் களம். உலகின் மிக அபாயகரமான இரு பந்து வீச்சாளர்கள் கிளென் மெக்ராத், ஷேன்வோர்ன்-சமாளிக்க வேண்டியிருக்கிறது. கடந்த ஆண்டு நமது அணி அவுஸ்திரேலியப் பயணம் சென்ற போது இந்த இருவருமே இல்லை அவுஸ்திரேலிய பந்துவீச்சு அப்போது பலவீனமாக இருந்ததற்கு அதுவும் காரணம்.

பெங்களூருடன் ஒப்பிடும் போது இனிப்போட்டி நடக்கும். ஆடுகளங்கள் நமக்கு சாதகமாக இருக்கும் போட்டியின் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்த அவுஸ்திரேலியா முயற்சி செய்யும். அதைக்கட்டுப்படுத்த வேண்டியது அவசியம். அதற்கு அடுத்து நமது துடுப்பாட்ட வீரர் போதுமான ஓட்டம் எடுக்கவேண்டியது மிகமிக முக்கியம்.

அடம் கில்கிறிஸ்ட் தலைமையிலான அவுஸ்திரேலியா 7 துடுப்பாட்ட வீரர்களுடன் விளையாடுகிறது. நமது அணியில் 6 துடுப்பாட்ட வீரர்கள் தான் பார்திப், இர்பான் இருவரும் நன்றாக விளையாடினாலும் துடுப்பாட்ட வீரர்களாக அவர் களிடம் இருந்து எதிர்பார்க்கும் அளவிற்கு வளரவில்லை. ஒவ்வொரு போட்டியிலும் நமது முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் இரண்டு பேராவது பெரிய ஓட்டம் எடுக்க வேண்டும். அப்போதுதான் அணி வலுவான நிலையை எட்ட முடியும் அதேபோல களத்தடுப்பில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.





**சிந்தனைக்கு**

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## தேவையற்ற 'சோலி'

விடுதலைப்புலிகள்–ஊர்காவற்படையினர் தடுத்து வைப்பு விவகாரம ஒரு முடிவிற்கு வந்து விடும் சூழ்நிலை உருவாகியுள்ளது. விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 10 புலிகளையும் பிணையில் விடுவிக்கச் சிறிலங்கா மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு வழங்கியதன் மூலம் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள இரண்டு ஊர்காவற்படையினரும் விடுவிக்கப்படுவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளதாகவே அறிய வந்துள்ளது.

விடுதலைப்புலிகள் –ஊர்காவற்படையினர் தடுத்து வைப்புத் தொடர்பான இவ்விவகாரமானது திருமலையில் வாழும் சிங்களவர்கள்/ அரசிற்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், ஹர்த்தால்கள் எனப் போராட்டத்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்தினையும். கிழக்கில் பதட்டமானதொரு சூழ்நிலையையும் உருவாக்குவதற்குக் காரணமாக இருந்ததெனில் மிகையாகாது.

இத்தடுத்து வைப்பு விவகாரமானது புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு உட்பட்டதா? அன்றி மாறானதா? என்பது ஒரு புறம் இருக்கட்டும். இவ்விவகாரமானது இந்தளவிற்கு வளர்ச்சியடையக் காரணம் என்ன? ஏன் இவ்விவகாரம் இத்தனை முக்கியத்துவம் பெற்றதாக மாறியது?

இதற்கு முன்னர் சிறிலங்காப் பொலிசார், இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஆயுதத்துடனும், ஆயுதம் இன்றியும் உட்புகுந்த வேளையில் கைது செய்யப்பட்ட வரலாறு உண்டு. ஆனால் அவர்கள் யாவரும் காலக்கிராமத்தில் –அதாவது எவரதும் முயற்சியோ அன்றி அரசியல் ரீதியாலான முதன்மைப்படுத்தலோ இன்றி விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் இவ்விடயத்தில் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டனர்.

அவ்வாறானால் விடுதலைப்புலிகள் திருமலையில் தமது கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஆயுதங்களுடன் புகுந்த ஊர்காவற் படையினரைக் கைது செய்து நீண்டநாட்கள் தடுத்து வைத்திருந்தது ஏன்? கிழக்கில் கைதாகி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளுடன் இவ்விடயம் சம்பந்தப்படுத்தப்பட்டு பிரஸ்தாபிக்கப்பட்டது எதற்காக?

இங்கு தான் சிறிலங்கா அரசாங்கம் புரிந்துணர்வு உடன்பாட்டையோ அன்றி யுத்த நிறுத்தத்தையோ உணர்வுபூர்வமாக ஏற்கவும் இல்லை. வழி நடத்தவும் இல்லை என்பது வெளிப்படுகின்றது. வேறு விதமாகக் கூறுவதானால் சுமுகமானதொரு சூழ்நிலை உருவாக அரசாங்கம் தன்னாலான ஒத்துழைப்பைச் செய்யவில்லை என்பதும் வெளிப்படும்

சிறிலங்கா ஆயுதப்படையினர் இரண்டு வெவ்வேறு இடங்களில் 10 விடுதலைப்புலிகளைக் கைது செய்தமைக்கு அவர்களிடம் ஆயுதம், வெடிபொருட்கள் என்பன இருந்தன என்பதே குற்றச்சாட்டு. இக்குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக ஒருசிலரவைகள் சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இக்குற்றச்சாட்டு வேண்டும் என்றே உருவாக்கப்பட்டது என்பது ஒருபுறம் இருப்பினும் விடுதலைப்புலிகளிடம் ஓரிரு ரவைகள் இருந்ததென்பதைப் பெரும் குற்றச்சாட்டுப் போன்று பதிவு செய்து அவர்களை வருடக்கணக்கில் தடுத்து வைத்திருந்தமையானது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். அதாவது சிறிலங்கா அரசின் அடிமனத்தின காழ்ப்புணர்வின வெளிப்பாடாகும்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் படி வெடிபொருட்களை எடுத்துச் செல்வது உடன்பாட்டு மீறல் தான். ஆனால் புலிகளிடம் இருந்தாகப் பெரும் தொகையிலானவையாகவேயன்றி பாவனைக்கானவையாகவோ இருக்கவில்லை.அதாவது விடுதலைப்புலிகள் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படும் வெடிபொருட்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டை ஆபத்திற்குள்ளாக்கும் வகையில் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு தொகையிலோ, தரத்திலோ போதுமானவையல்ல. இவற்றை வைத்திருந்ததாகக் கூறி புலிகளை வருடக்கணக்கில் தடுப்புக்காவலில் வைத்திருத்தல் என்பது நீதியுடனும், யதார்த்தத்திற்கு ஒத்ததான செயலாகவும் இல்லை. வேண்டுமென்று மேற்கொள்ளப்படும் செயலாகும்.

இத்தனைக்கும் பெருமளவு ஆயுத தளபாடங்களுடன் கைதுசெய்யப்பட்டவர்களை அடுத்த நாளே சிறிலங்கா நீதித்துறை விடுதலை செய்துள்ளது. இதற்குக் காரணம் சிறிலங்கா அரசு அவர்களைக் கைக்கூலிகளாக அமர்த்திக்கொண்டிருந்தமையே. ஆனால் தவறுதலாக ஏற்பட்டது அன்றி சிறிலங்காப் படைத்தரப்பால் வேண்டுமென்றே செயற்படுத்தப்பட்ட விவகாரத்தில் ஆண்டுக்கணக்கில் விடுதலைப்புலிகளைச் சிறிலங்கா நீதித்துறை சிறையில் அடைத்திருந்தது.

இவை சிறிலங்கா அரசினது விசமத்தனமானதும், நீதிக்குப் புறம்பானதுமான நடவடிக்கையாகும். அத்தோடு சமாதான முயற்சிகளுக்கும், நாட்டில் நிலவும் அமைதிச்சூழ்நிலைக்கும் ஊறு விளைவிக்கும் செயலுமாகும். சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகள் கைது விவகாரத்தில் நேர்மையுடனும் நீதியுடனும், புரிந்துணர்வுடனும் நடந்துகொண்டிருந்தால் ஊர்காவற்படையினரை நீண்ட நாட்கள் தடுத்து வைத்திருக்க வேண்டிய நிலை உருவாகியிருக்கமாட்டாது.

பேச்சு வழக்கில் கூறுவதானால் இது ஒரு தேவையற்ற 'சோலியாகவே' சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பாலும், அரசாங்கத் தரப்பாலும் உருவாக்கப்பட்டது. அரசாங்கம் சிறிலங்கா நீதித்துறையும் சம்பந்தப்படுத்தியது. ஆனால் தற்பொழுது தாம் உருவாக்கிய 'சோலிகளினால' தாமே நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய அவலம் ஏற்பட்டது. ஆட்சியாளர்கள் தமது கூற்றுக்களுக்கு மாறான வகையில் நடவடிக்கைகளைத் தாமே மேற்கொள்ள வேண்டிய நிலையும் உருவாகியது.

# தம்மீது சிகல உறுமயவின் தலையீட்டை தடுக்கக் கோருகிறார் தம்மாலோகதேரர்

சிஹல உறுமயவின் தலையீட்டை ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து தடுக்க வேண்டும் என உடுவே தம்மாலோகதேரர் கட்சியின் தலைவர் எல்லாவெல மேதானந்தவைக் கேட்டுள்ளார். சிஹல உறுமயவின் தலையீட்டில் இருந்து ஜாதிக ஹெல உறுமயவைக் காப்பாற்றும் போதே அந்தக கட்சியையும், பௌத்த மதகுருமாரையும் பாதுகாக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை ஜாதிக ஹெல உறுமயவின் அனைத்துத் துறைகளிலும் இருந்தும் தாம் விலகிக் கொள்வதாக கொலன்னாவ சுமங்கலதேரர் அறிவித்துள்ளார். ஏற்கனவே அவர் பாராளுமன்ற உறுப்பினர் துறையில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது. தாம் இனிமேல் ஒரு போதும் கட்சி அரசியலில் ஈடுபடப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# ஜாதிகஹெல உறுமய அடுத்த சில நாட்களில் உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிடும்

ஜாதிக ஹெலஉறுமய மத்திய குழு விசேட கூட்டமொன்றைப் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்ததேரர் தலைமையில் நடத்தியுள்ளது,

இக்கூட்டத்தின்போது பலபிரச்சினைகள் பற்றி ஆராயப் பட்டதாகவும், அடுத்த சிலநாட்களுக்குள் உத்தியோகபூர்வ அறிக்கையொன்று வெளியிடப்படுமென்றும் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். இக்கூட்டத்தில் அக்கட்சியின் செயலாளர் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# பேரினவாதிகள் போடும் எச்சில் இலைக்காக தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தாதீர்

## முஸ்லிம்களுக்கு சேகுஇஸதீன் அறிவுரை

பேரினவாதிகள் போடும் எச்சில் இலைக்காக தமிழ் மக்களின் போராட்டத்தை முஸ்லிம்கள் கொச்சைப்படுத்தக் கூடாது என தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் ஊடகத்துறை பிரதி அமைச்சருமான சேகு இஸதீன் தெரிவித்துள்ளார். அக்கரைப்பற்று ஆங்கில இல்ல மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றிய சேகு இஸதீன் இலங்கையில் புரையோடிப்போயுள்ள பேரினவாத சிந்தனைக்குள் முஸ்லிம்களின் அபிலாசைகளைச் சிறைப்படுத்த முடியாது எனவும், தமிழர்களின் போராட்டங்களைக் கொச்சைப்படுத்துவதற்கு முஸ்லிம்கள் பகடைக் காய்களாக்கப்படும் நிலை தொடரக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார். (32)

# தப்பி ஓடிய இராணுவச் சிப்பாயின் சடலம் வீதியோரத்தில் மீட்பு

(கொழும்பு)

தப்பியோடிய இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் வீதியோரத்தில் கிடந்து பொலிசாரல் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (வியாழன்) மாத்தளை-தம்புள்ள நெடுஞ்சாலையில் கிரிகல் பொத்த என்ற இடத்தில் இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது. விகாரைவீதி, மாத்தளையைச்சேர்ந்த கே.கன்னங்கரோ என்பவருடையதே இச்சடலம எனவும், இவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் என்றும் தெரிவிக்கும் மாத்தளைப் பொலிசார் இது தொடர்பாகச் சிலரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதே வேளை நுவரெலியா-பதுளை நெடுஞ்சாலையில் இனந்தெரியாத ஆணின் சடலமொன்று பொலிசாரால் மீட்கப் பட்டுள்ளது.

கைகள் பின்னால் கட்டப்பட்டும், வாயினுள் மஞ்சள் நிறத் துணி திணிக்கப்பட்ட நிலையிலும் காணப்படும் இச்சடலத்தின் தலையில் பெரிய காயமொன்று காணப்படுவதாகவும் இந்நபர் 25 வயதிற்கும் 28வயதிற்கும் இடைப்பட்டவர் என்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# வாகனக் கடத்தல், ஆயுதப்பறிப்பு; இராணுவ அதிகாரிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

வாகனக்கடத்தல் மற்றும் ஊர்காவற்படைவீரரின் ஆயுதத்தைத் திருட முயற்சித்தமை ஆகிய குற்றங்களுக்காக சிறிலங்காவின் இராணுவ லெப்ரினன்ட் ஒருவர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கே.ஜெயக்கொடி என்ற இந்நபர் வேறு இருவருடன் இணைந்து வர்த்தகர் ஒருவரின் வாகனத்தைக் காலி முகத்திடலில் இருந்து ஆயுதமுனையில் கடத்திச்சென்ற துடன், கந்தளாய்ப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் கடமையில் நின்ற ஊர்காவற்படை வீரரின் துப்பாக்கியைப் பலாத்காரமாகப் பறித்தெடுக்க முயன்ற தாகவும் குற்றம் சாட்டப்பட்டு, கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத் தப்பட்ட போதே இவரை இம்மாதம் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# பாவிக்கப்பட்ட வாகனங்கள் இறக்குமதிக்கு வரி அதிகரிப்பு

நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படும் பாவிக்கப்பட்ட வாகனங்கள் மீதான வரி அதிகரிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முதல் இந்த வரியை அதிகரித்துள்ளதாகவும், உந்துருளிகளிற்கும் முச்சக்கர வண்டிகள், பொருட்கள் மற்றும் பிரயாணிகளைக் கொண்டு செல்லும் வாகனங்களுக்கு இந்த வரி ஏற்புடையதல்ல என்று நிதியமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயன்படுத்திய வாகனங்களைக் கொள்வனவு செய்வதை கட்டுப்படுத்துவதும் இதன் மற்றுமொரு நோக்கமாகுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சி. சி 1500 ரகத்தைச் சேர்ந்த சிற்றூர்ந்துகளின் தீர்வைகள் 25 வீதத்தில் இருந்து 40 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளன. அதற்கான உற்பத்தி வரி 60 வீதமாக அதிகரிக கப்பட்டுள்ளது. சிறிய பெற்றோல் வான்களின் மீதான தீர்வை 48 வீதத்தில இருந்து 60 வீதமாக அதிகரிக்கப்படடுள்ளது. அதற்கான உற்பத்தி வரி 48 வீதத்தில் இருந்து 72 வீதமாக உயர்த்துப் பட்டுள்ளது. இந்தத் தீர்வை அதிகரிப்புக்காரணமாக குறிப்பிட்ட வாகனங்களின் விலைகளில ஒரு இலட்சம் முதல் நான்கு இலட்சம வரையிலான அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (32)

# வீதி ஒழுங்கைக் கண்காணித்த பொலிசார் வாகனம் மோதிப் பலி

வாகனப்போக்குவரத்தைக் கண்காணித்து கொண்டு நின்ற பொலிசார் ஒருவர் தனியார் பேருந்து ஒன்றினால் மோதிக் கொல்லப் பட்டார்.

நேற்று முன்தினம் கொழும்பு பேஸ்லைன் வீதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கே.குணரட்ண (வயது-42) என்பவர் உயிரிழந்தார்.

வேகமாக வந்த பேருந்து இப்பொலிஸ்காரரை மோதி வீழ்த்திவிட்டு, அவர் மீது ஏறி இறங்கிச் சென்றது. இதனால் படுகாயமடைந்த அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது உயிரி ழந்தார்.

குறித்த பேருந்தை தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஓட்டிவந்த அதன் நடத்துனர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# மருந்தாளர்கள் போராட்டத்தால் யாழ்.ஆஸ்பத்திரிப் பணிகள் பாதிப்பு

அரச கல்வித்தகைமை அங்கீகாரமற்ற மருந்தாளர்களை அரச மருத்துவமனைகளில் மருந்தாளர்களாக நியமிக்க சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ள முயற்சிகளிற்குக் கண்டனம் தெரிவித்து "வட-கிழக்கு மாகாண மருந்தாளர் பொதுச் சங்கம்" நேற்று நடாத்திய அடையாள வேலை நிறுத்தத்தினால் வைத்தியசாலைகளின் அன்றாடப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

வெளிநோயாளர்களிற்கான மருந்துகள் விநியோகிக்கப்படாமையினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இதேபோன்று மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் ஆதார வைத்தியசாலைகளிலும் இந்நிலையே நீடித்தது.

ஆயினும் வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் நலன்கருதி அவர்களிற்கான அத்தியாவசிய மருந்து விநியோகத்தில் மருந்தாளர்கள் ஈடுபட்டிருந்தமையினையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இதேவேளை அரச கல்வி அங்கீகாரம் பெற்ற மருந்தாளர்களையே அரச வைத்தியசாலைகளது வெற்றிடங்களிற்கு நியமிக்கக் கோரும் மகஜரொன்றை மருந்தாளர் சங்கம் சுகாதார அமைச்சிற்கு அனுப்பிவைத்துள்ளது. (27)

## அரசாங்கம் பரிசீலிக்கக் கூடிய திட்டத்தைப் புலிகள் முன்வைக்கவில்லை

### -ஆனந்த சங்கரி கூறுகிறார்

அரசாங்கத்தால் பரிசீலிக்கக் கூடிய எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இதுவரையிலும் முன்வைக்கவில்லையென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிற்கு எழுதிய கடிதத்திலேயே தான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளில் உத்தேசசபையில் பெரும்பான்மைப் பிரதிநிதுத்துவத்தை விடுதலைப் புலிகள் கோருவது ஏற்கமுடியாதென்றும், கிழக்கு மாகாணத்தில் சிங்களவரும் முஸ்லிம்களும் கணிசமாக வாழுகின்ற நிலையில் விடுதலைப்புலிகளின் கோரிக்கையை எந்தவகையிலும் ஏற்கமுடியாது எனவும் குறிப்பிட்ட ஆனந்தசங்கரி ஒரு வேளை அரசாங்கம் இதற்கு இணங்கினாலும் மக்கள் இதனை எவ்வாறு ஏற்பார்கள்? அரசாங்கம் இதற்கு இணங்கினால் அதன்பிறகு அந்த அரசாங்கம் நிலைக்குமா? என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

## நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கான ஆரம்ப நிகழ்வுக்கு அழைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக நியமனம் பெறும் பட்டதாரிகளுக்கான ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 21.10.04 வியாழக்கிழமை முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் காலை 9.00 மணியளவில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அவர்களின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ளதால் தற்போது நியமனம் பெற்ற 117 பட்டதாரிகளையும் தவறாது சமூகம் தருமாறு அரச வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் கேட்டுள்ளது. (08)

## கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக நியமனம் பெறும் பட்டதாரிகளுக்கும், அரச தொழில் தேடும் பட்டதாரிகளுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை முற்பகல் 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு புகுமுகமாணவர் ஒன்றியத்தில் இடம் பெறவுள்ளது. அத்துடன் புதிய அரச தொழில் தேடும் பட்டதாரிகளுக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதால், அனைத்து நியமனம் கிடைத்த பட்டதாரிகளையும், அரச தொழில் தேடும் பட்டதாரிகளையும் தவறாது சமூகம் தருமாறு அரச வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (08)

## மின்னல்...

யில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். இதேவேளை நேற்று முன்தினமும் புதுக்குடியிருப்புப் பகுதியில் ஒரு யுவதி காயமடைந்ததும், கற்சிலைமடுப் பகுதியில் இளைஞர் ஒருவர் மின்னல் தாக்கிப் பலியானதுடன் மேலும் இருவர் காயமடைந்ததும் தெரிந்ததே. (08)

## இரு துப்பாக்கிச்...

இருப்பதாகக் கூறி வெளியே வருமாறு அழைத்துத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள்.இச் சம்பவம் குறித்து வாழைச்சேனைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொன்டு வருகின்றனர் மட்டக்களப்பு வாழைச்சேனை கறுவாக்கேணியிலும் நேற்று முன்தினமிரவு துப்பாகிச் சூட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

இரவு 8 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் தேவநாயகம் சுதர்சன் (வயது 20) என்ற இளைஞர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் எதிர்கொண்ட நபரொருவர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார். வாழைச்சேனைச் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கண்காணிப்புக்...

வின் இனப்பிரச்சனை பற்றிய ஓர் அடிப்படை விளக்கம் உட்பட தற்போதைய சமாதானப் பேச்சுக்களின் நிலைப்பாடு மற்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் போன்றவை குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன் ஓர் விவரணக் கருத்துரை வழங்கினார். தற்போதைய நிலைப்பாடுகளை விரிவாகக் கேட்டறிந்த இராஜாங்க செயலாளர், போரினால் பாதிப்படைந்த மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் பின்லாந்து அரசு தனது முழுமையான ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கும் என்று நம்பிக்கை வெளியிட்டதுடன், சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கும்படி இரு தரப்பினருக்கும் அவசர வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.இராஜாங்க செயலாளரைச் சந்திக்கும் முன்னர், வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான இராஜாங்க செயலாளர் போலா மொய்சன்டர் அவர்களைச் சந்தித்த சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், போரினால் பாதிப்படைந்த பகுதிகளுக்கான மனிதாபிமான நிவாரண உதவிகள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர். இச்சந்திப்பை ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான கஜ்பா ஆல்பேர்ஸ் அவர்கள் ஒழுங்கு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்...

அமைப்புக்கள் சார்பில் சொல்லப்படுகிறது.

இதேவேளை தற்போதைய நிலையில் சந்தையில் அதிகரித்து வரும் அரிசி உள்ளிட்ட உலர் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தினால், நிவாரணத்திற்கு வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்களின நிறையளவு குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1981ஆம் ஆண்டு இலங்கை அரசினால் வகுக்கப்பட்ட உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவிற்கான பெறுமதியின் அடிப்படையிலேயே சுமார் 23 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தற்போதும் அக் கொடுப்பனவின் அடிப்படையிலேயே நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவிற்கு அரசினால் வழங்கப்பட்டு வரும் தொகையினைத் தற்போதைய விலைவாசி அதிகரிப்பிற்கேற்ப அதிகரித்துத் தருமாறு பல தரப்பினரும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் ஆக்கபூர்வமான பதிலேதும் இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் இவ்வருட இறுதியுடன் உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவை இடை நிறுத்தி சமுர்த்தி உதவித் தொகையினை வழங்கும் நடவடிக்கையினை எதிர்வரும் ஆண்டு முதல் அமுற்படுத்தப் போவதாக அரசு தற்போது அறிவித்துள்ளது.

எனினும் இவ்வாறான நிலையில் யாழ்குடா நாட்டில் கடந்த ஆறு மாதங்களாக நிவாரணக் கொடுப்பனவினைப் பெற்றுக் கொடுப்பதில் அரச அதிகாரிகளது அசமந்தப் போக்கே காரணம் என மக்களிடையே குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம் பெயர்வு மற்றும் சொத்து இழப்பு, வேலையிழப்பு ஆகிய காரணங்களினால் ஒரு இலட்சத்து 19 ஆயிரம குடும்பங்கள் இவ் உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது (27)

## இரு...

செல்லப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் வயோதிபப் பெண்மணி ஒருவர் மரணமடைந்தார்.

இவ்விபத்தில் வாகனச் சாரதி பொன்னுத்துரை-சிவலிங்கம் (வயது 57) கல்வியங்காடு, யாழ்ப்பாணம். வாகனத்தில் பயணித்த நாகராஜா-சவுந்தரம் (வயது 62) கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற இருவருமே மரணமடைந்தவர்கள் ஆவர்.

மேலும், காயமடைந்தவர்கள் ஜெயகாந்தன்-செல்வராணி (வயது 35) கச்சேரியடி, யாழ்ப்பாணம், குமாரசாமி-தர்மலிங்கம் (வயது 58) கல்வியங்காடு, யாழ்ப்பாணம். சடாச்சரம்-சந்திரன் (வயது 42) பெரியமாவடி, சாவகச்சேரி ஆகிய மூவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். ஏனைய மூவர்களான அருட்சோதி-நித்தியா (வயது 20) நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. பொன்னுத்துரை-நந்தகுமார் (வயது 27) உப்புக்கேணி, சாவகச்சேரி. செல்லத்துரை-திருநாவுக்கரசு (வயது 62) திருநெல்வேலி, யாழ்ப்பாணம் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்தோடு சம்பவ இடத்திற்கு வருகைதந்த கிளிநொச்சி மாவட்ட நீதவாளர் சாதனா சம்பவத்தை நேரடியாகப் பார்வையிட்டு விசாரணையினை மேற்கொண்டுள்ளார்.

பாரவூர்தியில் பயணித்த எவருமகாயமடையவில்லை. பாரவூர்தி முன பக்கம் முற்றாகச் சேதமாகியுள்ளது.

அடுத்த கோரமான விபத்தானது பூநகரி வீதியிலுள்ள ஓவசியர் கடைச்சந்தியில் நேற்றுக்காலை இடம்பெற்றது. காலை 8.45 மணியளவில் பூநகரிப் பகுதியிலிருந்து துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்த கிருஷ்ணபிள்ளை வெங்கடாசலம் (வயது 55) என்பவரைப் பரந்தனில் இருந்து பூநகரி நோக்கிச்சென்ற பாரவூர்தி மோதியது. சம்பவம் இடம்பெற்ற இடத்திலேயே மேற்படி நபர் மரணமடைந்தார். இவர் கிளிநொச்சி செல்வாநகர்ப் பகுதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி இருவிபத்துக்களின் மேலதிக விசாரணைகளையும் தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

### -உலக தரிசன நிறுவனத்தால்-

## கிளிநொச்சி மருத்துவமனைக்கு வைத்திய உபகரணங்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கென உலக தரிசன நிறுவனத்தினரால் பதினொரு இலட்சம் ரூபா பெறுமதியுடைய வைத்திய உபகரணங்கள் நேற்று அன்பளிப்பாக வழங்கப்பெற்றன.

மேற்படி பொருட்கள் கையளிப்பு நிகழ்வு நேற்று நண்பகல் 11.00 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் மாவட்ட




வைத்தியசாலையில் நடைபெற்றது. மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் 11 இலட்சம் ரூபா பெறுமதியான தானியங்கி பகுப்பாய்வு இயந்திரம் (ஓட்டோ அனலைசர்) மற்றும் குழந்தை பராமரிப்பு இயந்திரம், இரு குளிர் சாதனப் பெட்டிகள், பகுப்பாய்வு இயந்திர உபகரணங்கள் என்பவற்றை உலக தரிசன நிறுவன கிளிநொச்சி மாவட்ட திட்டப் பணிப்பாளர் நைல்ஸ், கிளி.மாவட்ட வைத்திய அதிகாரியிடம் கையளித்தார். நிகழ்வில் நன்றியுரையினை வைத்திய கலாநிதி பிறைற்ரன் வழங்கினார்.

உலகில் தரிசன நிறுவனத்தினரால் ஒருலட்சம் ரூபா செலவில் பகுப்பாய்வு இயந்திரத்திற்கென தனியான அறையொன்று வளாகத்தில் நன்கொடையாக அமைத்து கொடுக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (சோ)




கொக்காவில் பகுதியில் ஹயஸ் வாகனத்துடன் மோதிய பாரவூர்தி

### -புலமைப்பரிசில் பரீட்சை-

## யாழ்.இல் முதன்மை இடம் பெற்ற 10 மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முதன்மை இடங்களைப்பெற்ற 10 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தில் இடம் பெற்றது.

தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் குணேந்திரனது தலைமை உரையைத் தொடர்ந்து வாழ்த்துரையை யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன், ஆரம் பக்கல்விப் பணிப்பாளர் கமலா சுப்பிரமணியம், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத்தொடர்ந்து முதன்மை இடங்களைப் பெற்ற 10 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்ற பிரவன், அனட்றூவிஷா, றமணன் ஆகியோருக்கான பரிசிலை யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரனும், 4 ஆம் இடத்தைப் பெற்ற கஸ்தூரிராஜன், திருமகள், ஜதுஷன் ஆகியோருக்கான் பரிசிலை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், 4ஆம் இடத்தைப் பெற்ற துவாரகன், லவலோஜன், நிருகன் ஆகியோருக்கான பரிசில்களை யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழில்அன்பனும் வழங்கிக் கௌரவித்தனர். இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (36)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.